செந்தமிழ்ச் செல்வி



அரசு

சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨௦௧௫ ஆனி பரல்-௧௧

ஜூலை 1984

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-டு அ திரு. வ. ஆண்டு உ௦கரு, ஆனி பரல்-கக

சூலை 1984

வள்ளுவர் வழி நிற்போம்

திருக்குறளின் சீர் சிறப்புகளைப்பற்றிக் கற்றவர்களேயன்றி மற்றவர்களும் அதிகமாகப் பேசுகின்ற காலம் இக்காலம். தமிழக அரசும் திருக்குறளைப் பல்லாற்றானும் சிறப்பித்துப் போற்றி வருகின்றது. பேருந்துகளிலும் அரசு அலுவலகங்களிலும் குறளின் குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அங்ஙனமே குறள் நெறியில் நிற்க வேண்டும் எனப் பேசாத மனிதரோ, வள்ளுவர் சீர் பரப்பாத கழகங்களோ மன்றங்களோ, எழுதாத ஏடுகளோ இல்லை எனலாம். நாம் கூட ''திருக்குறள் பணியே கழகத்தின் பணி'' எனப் பலகால் செல்வியில் எழுதியுள்ளோம்.

இங்ஙனமெல்லாம் திக்கெட்டும் திருக்குறள் பரப்பப்படும் இந்நாளில்தான், வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்திய அறங்கள் பல நம்மவர்களால் கைவிடப்படும் நிலையினையும் காண்கிறோம்.

வள்ளுவர் வலியுறுத்திய அறங்களில் சூது மறுத்தலும் கள்ளுண்ணாமையும் முதன்மையாகக் கருதத்தக்கவை. ஐம்பெருந்தீமைகளுள் கள்ளும் சூதுமே பிற எல்லாத் தீமைகட்கும் அடிகோலுவனவாயுள்ளன. பிற அறங்களைக் கடைப்பிடிக்காவிடினும் இவ்விரு தீமைகளை விலக்க வேண்டும் என்ற உணர்வேனும் நம் மக்களிடையே தோன்ற வழியுண்டோவெனில், இல்லை; அதற்கு மாறாக விடுதலை பெற்ற நாட்டில் இவ்விரு தீமைகளும் தலைதூக்கி நிற்கின்றன.

சூது, கள்ளுண்ணாமை எனத் தனித்தனி அதிகாரங்கள் வகுத்து, இவற்றால் வருந்தீமைகளை வள்ளுவர் படித்துப்படித்து எடுத்துச் சொல்லியும் நம் மக்கள் திருந்துவதற்கு வழியில்லை.

பரிசுச் சீட்டு விற்பனை என்ற முறையில் சூதும், மதுக்கடைகள் மூலம் மதுவருந்தும் பழக்கமும் நாடெங்கும் பரவிவிட்டன. அது மட்டுமின்றி, இவற்றை நாகரிகமெனவும், பொருளீட்டத்தக்க வணிக முறைகளாகவும் பலர் கருதுகின்றனர்.

பரிசுச் சீட்டு விற்பனை இமய முதல் குமரி வரை ஏறுநடை போடுகின்றது. எப் பக்கம் நோக்கினும் பரிசுச் சீட்டுகள்பற்றிய கவர்ச்சி தரும் விளம்பரங்களும், ஆடவர், பெண்டிர், மாணவர், தொழிலாளர், இளையோர், முதியோர் என்றின்னோரிடமெல்லாம் பரிசுச் சீட்டுபற்றிய பேச்சுமே பெரும் பேச்சாக இருக்கிறது.

'ஒன்றெய்தி நூறிழக்கும் சூது'—

'வென்றிடினும் வேண்டற்க சூதினை'

என்றெல்லாம் வள்ளுவர் வலியுறுத்திக் கூறும் அறிவுரைகள் இன்று மிக எளிதாக ஒதுக்கப்படுகின்றன.

பரிசுச் சீட்டுகளால் தம்முடைய வறுமையைப் போக்கவும், முயற்சியின்றிக் குறுக்கு வழியில் பொருள் தேடவுமே பெரும் பாலோர் விரும்புகின்றனர். இதனால் அத்தகையோர் தம் கைப் பொருளையும் இழந்து மேலும் இன்னலுறுகின்றனர். பொருள் இல்லாதோர் நிலை இஃதென்றால் செல்வர்கள் இச் சூதாட்டத்தினைப் பொழுதுபோக்காகக் கருதுகின்றனர். இங்ஙனமாகச் சூதும் வாதும் மக்களை வேதனைக்குள் ஆழ்த்தி வருகின்றன.

இச் சூதின் உடன்பிறப்பெனக் கருதத்தக்க 'மது' மற்றொரு புறம் மக்களைச் சொல்லொண்ணாத் துயரில் ஆழ்த்தி வருத்துகின்றது. ஒரு காலத்தில் மதுவிலக்கால் தனிச் சிறப்புப் பெற்றிருந்த தமிழகம் அதன் பெருமையை இழந்து வருகிறது. அந் நாளில் மது உண்ணல் சிறுமை—குற்றம் என்றெல்லாம் எண்ணியிருந்த நிலை மாறி இந்நாளில் இளைஞர் முதல் முதியோர் வரை, ஏன், மாணவர் உட்பட மதுவருந்தத் தலைப்பட்டுவிட்டனர். இத் தீமைகளை வரு வாயின் ஊற்றுகளாகக் கருதி அரசுகளும் இவற்றை ஊக்கி வரு கின்றன.

அரசுகள் பொருள் செயல் வகையினைத் தேட வேண்டியது இன்றியமையாததுதான். ஆனால், அப் பொருள் தீதின்றி வரும் பொருளாதல் வேண்டும். மக்கள் எப்படியேனும் பொருள் தேட வேண்டும் என்று எண்ணி முனைவதால்தான், இன்று நாட்டில் கொலை களவு போன்ற தீமைகள் பல்கிப் பெருகக் காண்கின்றோம்.

ஆனால் ஒரு நற் செய்தி! நம் தமிழக முதல்வரவர்கள் அண்மைக் காலமாக மீண்டும் மதுவிலக்கினைச் செயற்படுத்தப்

போவதாகப் பேசி வருகிறார். இப் பேச்சுகள் எத்துணை விரைவில் செயல் வடிவம் பெறுகின்றனவோ அத்துணை விரைவில் நாடு நலம் பெறும் என நம்புகின்றோம்.

இங்ஙனம் மதி கெடுக்கும் மதுவினை விலக்க முனையும் அரசு, மக்கள் நிதியினையும் மதியினையும் கெடுக்கும் பரிசுச் சீட்டு விற்பனைக்கும் ஒரு முடிவு கட்டுமாயின் அச் செயல் பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

எனவே, தனி மனிதராயினும் குழுகாயமாயினும், அரசு ஆயினும் சில நன்னெறிகளைக் கடைப் பிடித்தல் மிகமிக இன்றியமையாததாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வள்ளுவர் வழி அனைவர்க்கும் பொது வழியாகும். அவ்வழி நின்று அரசு முனைதல் வேண்டும். ஏனெனில் அரசு எவ்வழியோ அவ்வழியிலேதான் குடிகளும் செல்வர். ஆகவே அரசும் மக்களும் வள்ளுவர் வழி நிற்க முயல்வார்களாக!

கலைஞர் மணிவிழா வாழ்த்து

[பெரும்புலவர் இர. திருஞானசம்பந்தன்]

எழுமின் எழுமின் செந்தமிழ்ச் சீயங்காள்!
விழிமின் விழிமின் முத்தமிழ் போற்றக்
கூடுமின் கூடுமின் நாட்டுநிலை கூறுமின்
என்றே நாளும் முரசொலி எழுப்பி
பொன்கொழி நாடாய் என்நாடு ஆகென
வள்ளுவர் தமக்கே வளமார் கோட்டமும்
உள்ளும் போதெலாம் நெஞ்சை யள்ளும்
கடலுள் மறைந்த கவினுர் புகாரை
படம்பிடித் தெழுப்பிய பான்மை யாக
பூம்புகார் எழுப்பிய சோம்பலில் கலைஞ!
சூம்பல் தோளனையும் சூரன் ஆக்கினை
அறுபான் ஆண்டாய் ஆற்றிய தொண்டினை
அறுதியிட் டுரைத்தல் ஆகும் செயலோ?
நிலையான தலைவர் தமிழவேள் டாக்டர்
கலைஞர் கருணா நிதியார் உலகில்
மணிவிழா வுடனே பவழமும் முத்தும்
கண்டே களிக்கெனக் களிப்பு மிக்கே
உலகுடன் சேர்ந்தே வாழ்த்துவம் யாமே!

முறைப்பெயர் ஆய்வு

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

(முன் இதழ் ௩௮௪ ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர் என்பதைப்பற்றிச் சென்ற செல்வியில் கண்டோம். ஈன்றாள், பயந்தாள் என்பனவும் பெற்றோளைக் குறிக்கும் என்பதையும் அறிந்தோம். இக் கட்டுரையில் 'தாய்' என்னும் முறைப்பெயரைப் பற்றிக் காண்போம்.

தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் பொதுவாக அமைந்த முறைப்பெயர் 'ஆய்' என்பதாம். அப் பெயர் தன்மையில் 'எம் ஆய்' எனவும், முன்னிலையில் 'நும் ஆய்' எனவும், படர்க்கையில் 'தம் ஆய்' எனவும் வழங்கின. ஆய்க்கு அமைந்த இம்மூவிட முறைப்பெயர்களே பின்னர் முறையே யாய், ஞாய், தாய் என ஆயின. இவ்வாட்சி பழங்காலத்தில் மாறாமல் வழங்கின என்பது பழைய இலக்கியங்களால் அறியப்படுகின்றன. ஆனால், 'ஆய்' என்பதன் இடத்தைத் தாய் பற்றிக்கொண்டதால் எம்தாய், நும்தாய், தம்தாய் என இக் காலத்தில் வழங்குகின்றன. ஆய் என்பது 'ஆயி' என இகர இறுதி ஏற்று வழங்குவதும் உண்டு.

ஆய் என்பது போலவே 'ஓய்' என்பதும் பெற்றோள் பெயராக முன்பு வழங்கியது.

''ஆரண மறையோன் எந்தை அருந்ததிக் கற்பின் எம்மோய்'' என்பது கம்பர் வாக்கு. ''ஆய்ஓய் என்று ஏன் கத்துகிறாய்'' என்னும் வழக்கு, 'ஓய்' என்பதன் ஆட்சி இருந்தமையை வலியுறுத்தும். எம்மோய், நும்மோய், தம்மோய் என்பன முறையே மூவிடங்களுக்கும் முறைமைபூண்டு இருந்தனவாம்.

முறைப்பெயர்களாக வழங்குவனவற்றுள் பெரும்பாலனவும் விளிப்பெயர்களே! அம்மா, அப்பா, அக்கா, மாமா, தாத்தா முதலிய முறைப்பெயர்கள் விளிவடிவாகவே இருத்தல் அறிக. அடிக்கடி அழைத்து, அழைத்த பெயரே பெயராக அமைந்துவிட்டமையால் முறைப்பெயர்கள் விளிப்பெயராக அமைந்துள்ளனவாம்.

அம்மை, அம்மு, அம்மன் என்பவை தாயைக்குறிக்கும் பெயர்கள். இவை 'அம்மா' என்னும் விளிவடிவாய் நின்றன.

''அம்ம' என்பது அண்மைவிளியாம். அது, ''யான் சொல்வதைக் கேட்க'' என்னும் பொருளில் வழங்கலாயிற்று. அதனால், ''அம்ம கேட்பிக்கும்'' என இலக்கணம் வகுத்தார் ஆசிரியர் தொல் காப்பியனார்.

குறவஞ்சி நூல்களில் 'அம்மே' என்னும் விளிப்பெயர் பெருக வழங்கும். உலகவழக்கிலும் பெருக வழங்குவதே. 'அம்மோ' என்பதும் வழக்கில் ஊன்றியதேயாம். 'ஏ அம்மே' என்பது 'எம்மே' என்றும், 'ஏ அம்மோ' என்பது 'எம்மோ' என்றும் வழங்கப் பெறுதலும் எவரும் அறிந்ததே.

அம்மை என்பது அம்மா என ஆயினாற்போல அன்னை என்னும் பெயரும் 'அன்னா' என வழங்கும். அம்மே என்பதுபோல 'அன்னே' எனவும் வழங்கும். 'ஐ' என்னும் ஈறு 'ஆய்' என்னும் ஈறாகும் என்பதன்படி 'அன்னாய்' எனவும் வழங்கும். பழநூல்களில் பெரிதும் காணப்படுவதாம். அம்மோ என்பது போல அன்னோ என வழங்கு தலும் உண்டு. அன்னோ என்பது 'அந்தோ' என்னும் பொருளில் வருதலும் வழக்கு. 'அன்னே' என விளியாதல் ''அன்னே உன்னை யல்லால் ஆரை நினைக்கேனே'' என்னும் தேவாரத்தால் தெளிவாம்.

'அஞ்ஞை' என்பதும் தாயைக் குறிக்கும் முறைப்பெயரேயாம். இது 'அஞ்ஞா' என விளிவடிவுபெறும். 'அஞ்ஞை' என்பது அண்மை விளியாக அமைதல் ''அஞ்ஞை. நீ ஏங்கி அழல்'' என வரும் சிலப்பதிகாரத்தால் விளக்கமாம். அஞ்ஞை என்னும் பழந் தமிழ்ச்சொல் இக் காலத்தில் ஓரினத்தில் பெருவழக்குடையதாய், அதுவே அவ்வினத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றன் பெயராய் வழங்கி வருதல் அறியத்தக்கதாம்.

அம்மை, அன்னை, அஞ்ஞை என்னும் பெயர்கள் அகரம் சார்ந்த மெல்லினமாய் அமைதலையும், அப்பன், அச்சன், அத்தன் என்னும் பெயர்கள் அகரம் சார்ந்த வல்லினமாய் அமைதலையும் நோக்குவார் ஒலியியலால் பண்பியலை விளக்கிய முந்தையோர் திறத்தை இனிதின் அறிவர்.

தாயைக்குறிக்கும் பெயர்களுள் 'ஆத்தாள்' என்பதும் ஒன்றாம். அஃது இருவகை வழக்கிலும் ஊன்றியதேயாம். ஆத்தாளையும், ஆத்தாளின் மூத்தாளையும், ஆத்தாளின் ஆத்தாளையும் ஒரு பாடலில் குறிப்பார் காளமேகப்புலவர். ''ஆத்தாளை அபிராம வல்லியை'' என்பது அபிராமி அந்தாதி. ஆத்தாளுக்கு அரிசிபோட்டு எரியூட்டலுக்கு உருகுவார் பட்டினத்தார்.

அகத்துரிமையுடையவள் யாவள்? அவள் அகத்தாளாய்ப் பின்னர், ஆத்தாளாய் ஆனுள். 'அகப்பை' ஆப்பையாய், 'தொகுப்பு' தோப்பாய், 'உவகை' ஓகையாய் அமைந்தாற்போல அகத்தாள் ஆத்தாள் ஆனுள். 'அகத்துக்காரி' என்பவள் ஆத்துக்காரியாய் வழங்கப்படுதலை ஒப்பிட்டுக் காண்க. அகத்துக்காரியாக இருப்ப வளே, ஆத்தாளாகவும் அமைகின்ருள் என்பதையும் கருதுக.

ஆத்தாள் என்பது ஆத்தா, ஆத்தே, ஆத்தோ என விளியாகும். 'ஏ ஆத்தே' என்பதும் 'ஏ ஆத்தோ' என்பதும், 'ஏத்தே, ஏத்தோ என வழங்கும்.

தெளவை, ஒளவை என்பன அம்மையைக் குறித்தல் மூத்தவள், பெரியவள் என்பதாலேயாம். தெளவை என்பது அக்கையையும், ஒளவை என்பது தாயைப்பெற்ற தாயையும் குறிக்கும் முறைப் பெயர்களாம். சில குடும்பச் சூழல்களில், அவர்கள் தாய் நிலையையும் ஏற்க நேர்ந்த நேர்வால் இப்பெயர்கள் தாய்க்கு உரியன வாயினவாம்.

தாயைக்குறிக்கும் அம்மா, ஆத்தா என்னும் பெயர்கள் பொது வாகப் பெண்பால் விளிப்பெயர்களாய்—அகவை நோக்குதலும் இல்லாமல்—வழங்குதல் அறியத்தக்கது. 'வாங்க அம்மா' 'வா அம்மா' என்பன போன்ற வழக்குகளை எண்ணுக. காளியம்மா, மாரியாத்தா என்பன போன்ற பெயர்களில் அம்மா, ஆத்தா என்பவை பெயரொட்டாக அமைந்தமையும் தெளிக.

இனி, அம்மையின் மூத்தாள் இளையாள் ஆகியவர்கள் பெரியம்மா, பெரியாத்தா, சின்னம்மா, சின்னுத்தா, சிற்றவ்வை, சிற்றன்னை, சித்தி என வழங்கப்படுதல் எவரும் அறிந்ததே. அம்மாவின் உடன்பிறந்த இளையாள் அல்லது சிற்றன்னை நல்லம்மா, நல்லாத்தா நல்லாயி என வழங்கப்படுதல் பழங்காலத்து வழக்கில் இருந்த 'நற்ருய்' என்பதன் எச்சம் ஆகலாம்.

அம்மா, அம்மம்மா, அம்மம்மோ, அம்மாடியோ, அத்தத்தா, ஆத்தா, ஆத்தாடி, ஆத்தாடியோ என வழக்கில் உள்ள உணர்ச்சிச் சொற்கள், அம்மையின் அரவணைப்பு, அணுக்கம், உருக்கம், உரிமை இன்னனபற்றி வழக்கில் ஊன்றியனவாம். ''அடித்தபோதும் அன்னு என்று அழும் குழவி''யையும், ''தடித்ததோர் மகனைத் தந்தை தான் அடித்தால் தாய் அணைத்திடுதலையும் எவரே அறியார்?

———

காளைத்தேவரா? மணவழகரா?

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எஸ்., டி.ஓ.]

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் வழியில், பதினெட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதூரிலிருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் மண்பாதையில், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்தான் கோனேரி ராசபுரம். தேவாரப் பதிகங்கள் இவ்வூரைத் திருநல்லம் என்று அழைக்கின்றன. இவ்வூரில்தான் சோழப் பேரரசி செம்பியன் மாதேவியாரின் கற்றளிப் பணியான அருள்மிகு உமாமகேசுவரர் ஆலயம் இருக்கிறது. இக் கோயில் வாழ் இறைவனை அப்பரடிகள் செல்லமாக 'உமைக்கு நல்லவன்' என்று அழைத்து மகிழ்கிறார்.

அழகிய சிற்பங்களையும், பல சுவையான செய்திகளை உள்ளடக்கிய அற்புதமான கல்வெட்டுகளையும் கொண்டு விளங்கும் இத் திருக்கோயிலில், தமிழகத்தின் புகழ்வாய்ந்த பல செப்புத் திருமேனிகள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையன கண்டராதித்தரின் மனைவியாரும் மதுராந்தக உத்தம சோழரின் தாயாருமான செம்பியன் மாதேவியார் செய்தளித்தவை. இவ்வம்மையின் இறைப் பற்றும், தெய்வத் திருப்பணிகளும் தமிழகத்துக் கலைவரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கவையாகும். இப் பெருமாட்டியால் செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளும் இவர் காலத்துச் சிற்ப வடிவங்களும் ஈடு இணையற்ற அழகுடையவை. காண்போர் நெஞ்சைக் கசிந்துருக வைக்கவல்ல அக் கற்பனைப் படைப்புகளில் ததும்பும் கலையழகும் கருணைப் பொலிவும் தனித் திறம் வாய்ந்தவை. செம்பியன் மாதேவி கலைமுறை என்றே ஒரு புதிய கலைமுறையைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் அப் பேரரசி.

செம்பியன் மாதேவி திருநல்லத்து உமைக்கு நல்லவர் கோயிலுக்குச் செய்தளித்த செப்புத்திருமேனிகளுள், முப்புரம் எரித்த இறைவர் (திரிபுராந்தகர்) வடிவமும், காளைத்தேவரின் (ரிஷப தேவர்) வடிவமும் குறிப்பிடத்தக்க எழிற்கோலங்களாகும். இவ்விரண்டனுள் பிரச்சினைக்குரியதாய் விளங்குவது காளைத்தேவரின் படிமம் தான். இதைப் பலரும் மணவழகர் (கல்யாண சுந்தரேசுவரர்) படிமம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஏன் இந்தத் தவறு நிகழ்ந்துள்ளது என்பதைக் காண்பதுடன், இப் படிமம் காளைத்தேவரா,

மணவழகரா என்பதையும் தெளிவாக உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கண்ணில் நிறையும் அழகு வாய்ந்த இந்தக் காளைத்தேவர் படிமத்தில் இறைவனும் காளையும் ஒரு தளத்திலும், இறைவி தனியாய் இன்னொரு தளத்திலும் காட்சியளிக்கிறார்கள். இதில் இறைவன் இடக் காலை ஊன்றி, வலக் காலை இலேசாக வளைத்து, வலப் பின் கரத்தில் பரசுவும், இடப் பின் கரத்தில் மானும் கொண்டு எழில் ததும்பக் காட்சி தருகிறார். இறைவனின் வல முன் கை அலவன் முத்திரையில் (கடக முத்திரை) எதையோ பிடித்திருப்பது போன்ற உருவ அமைப்பில் காட்டப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி இக் கையில் வக்ர தண்டாயுதம் இருக்க வேண்டும்.[1] இப் படிமத்தில் அப் படைக் கருவி காணப்படவில்லை. இட முன்கை முழங்கையில் வளைக்கப்பட்டு மீண்டும் மணிக்கட்டில் கீழ்நோக்கிச் சரிக்கப் பட்டுள்ளது. இக் கை காளையின் தலைமீது வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப் படிமத்தில் இறைவனின் இடப்புறம் நிற்கும் காளை தன் நாவால், இறைவனின் இட முன் கையினை அன்போடு தடவிக் கொடுப்பதுபோலக் காட்டப்பட்டுள்ளது. இது விதியை மீறியதென்றாலும், இங்கு வார்ப்புக் கலைஞனின் கற்பனை நெஞ்சைத் தொடுகிறது.

தேவியின் வடிவம் மூன்று வளைவுக் கோலத்தில் தனித்தளத்தில் காணப்படுகிறது. இத் தேவியின் இடக் கையில் நீலோத்பல மலர் காட்டப்பட்டுள்ளது. வலக் கை இன்னொரு கையைப் பற்ற முனைவதுபோல், அல்லது எதையோ பெறுவது போன்ற உருவ அமைப்பில் நீட்டப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி காளைத் தேவரின் அருகிருக்கும் அம்மையின் வலக்கை முழங்கை அளவில் மடக்கப் பட்டு, கையினில் மலர் காட்டப்பெற வேண்டும், இடக் கை தொங்கும் கையாக அமைய வேண்டும்.[2] இங்கு இரண்டு கைகளுமே அப்படி அமையாதது மட்டுமன்றி, மணவழகர் கோலத்துக்குரிய மணமகளின் மெய்ப்பாட்டில் அமைந்துவிட்டது குறிப்பிடத் தக்கது.

மணவழகர் கோலத்தில், அம்மையின் வலக் கை இறைவனின் கையினைப் பற்ற நீட்டப்பெற்றிருக்க வேண்டும், இடக் கையில் மலர் இருக்க வேண்டும்,[3] என்று ஆகமங்கள் கூறுகின்றன. இந்தக்

1. Elements of Hindu Iconography, T. A. Gopinatha Rao, Vol II,, part I., P. 353.


2. Ibid—P. 353.

3. Elements of Hindu Iconography, T. A. Goplaatha Rao, Vol II-part I., P. 353.

காளத்தேவர் படிமமும் மணவழகர் படிமமும்



கோனேரி ராசபுரம் காளத்தேவர் படிமமும், மணவழகர் தொகுப்பைச் சேர்ந்த தேவியும்.



திருமணஞ்சேரி மணவழகர் படிமம். தேவியுடன்.

காளைத்தேவரின் இறைவியும் மணவழகருக்குரிய இறைவி கோலத்தில் அமைந்திருப்பதால்தான் பேரறிஞர் பலர் இப் படிமத்தை இன்ன வடிவம் என இனம் காண்பதில் குழம்பியுள்ளனர். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இப் படிமத்தை மணவழகர் படிமமாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.[4]

மணவழகர் படிமத்தில் காளை இருக்கமுடியாது. காளையுடன் இறைவனும் இறைவியும் காணப்பட்டால் அப் படிமத்தைக் காளைத் தேவராகத்தான் கொள்ள வேண்டும். மேலும் ஆகம விதிப்படி மணவழகர் கோலத்தில் வடிக்கப்படும் இறைவனின் வல முன்கை, இறைவியின் நீட்டப்பட்ட கையினைப் பற்றுவதுபோல் திருமணக் குறிப்பு காட்டி நீட்டப்பட்டிருக்க வேண்டும்.[5] இட முன்கை அருள் முத்திரையில் (வரதம்) காட்டப்பெறல் வேண்டும். திருமணஞ் சேரியிலுள்ள மணவழகர் வடிவமும், திருவேள்விக் குடியிலுள்ள மணவழகர் வடிவமும் ஆகம விதிப்படி அமைந்தவை. இவற்றின் படங்களையும் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தம் நூலில் பதிப்பித்துள்ளார்.[6] இருந்தும் திருநல்லம் காளைத்தேவர் படிமத்தை மணவழகர் படிமமென்று தவருகக் குறித்துள்ளார். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றல் இக் கோயில் கல்வெட்டு ஒன்றிலேயே இந்தக் காளைத்தேவரின் செப்புத்திருமேனி குறிக்கப்பெறுவதுதான். 'திரிபுராந்தகர், ரிஷப தேவர் (காளைத் தேவர்), கணபதி ஆகிய உலோகத் திருமேனிகளுக்குப் பால், தயிர், வெண்ணெய், சர்க்கரை, தேன் என்பவற்றல் முழுக் காட்டும் செலவு',[7] என்று உத்தம சோழனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மணவழகர் படிமத்தைப்பற்றி எந்தக் கல்வெட்டிலும் யாதொரு குறிப்புமில்லை. இந்நிலையில் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இப் படிமத்தை எந்த அடிப்படையில் மணவழகர் வடிவமாய்க் கொண்டார் என்பதுதான் விளங்காத புதிராக உள்ளது.

திரு. ஆராவமுதன் இத் தொகுப்பிலுள்ள இறைவியின் வடிவம் செம்பியன் மாதேவியின் செப்புப் படிமமாக இருக்கலாம் என்று

---

4. Early Chola Temples, S. R. Balasubramaniam, photo plate. No. 172.

5. Elements of Hindu Iconography, T. A. Gopinatha Rao, Vol II-part I 339-340.

6. Early Chola Temples, S. R. Balasubramaniam. photo plates, 234, 248.

7. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பக். 341. Early Chola Temples, S. R. Balasubramaniam, p. 172.

கருதுவதாகத் திரு. வேதாசலம் என்பவர் தம்முடைய 'செம்பியன் மாதேவி' கட்டுரையில் குறித்துள்ளார்.[8] மனிதர்களின் வடிவங்கள் பொதுவாகக் கூப்பிய கைகளுடன்தான் வடிக்கப்பெறும் என்பதுடன், இவ்வம்மையின் வலக்கர நீட்டல் வேறு இதைச் செம்பியன் மாதேவி யாகக் கொள்ளத் தடையாகிறது.

காளைத்தேவர் படிமத்துடன் இருக்கும் இறைவி மணவழகர் தொகுப்புக்குரிய இறைவியாக அமைந்துவிட்டதுதான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணம். திருமணக் குறிப்பு காட்டி நிற்கும் இவ் வடிவம் திட்டமாகக் காளைத்தேவருக்குரிய இறைவியல்ல. வேறு பல மணவழகர் தொகுப்புச் செப்புத் திருமேனிகள் இக் கோயி லில் இருந்து இப்போது மறைந்திருக்கலாம். இவ்வம்மையின் வடிவம் அத் தொகுப்புடன் தொடர்புடையதாய் இருக்கலாம். காளைத் தேவர் படிமம் அம்மையின்றியே உருவாக்கப்பட்டிருக்கலாம்; அல்லது காளைத்தேவரின் அம்மையும் காலப்போக்கில் மறைந்திருக்க லாம். இவையெல்லாம் வெறும் கருதற்பாடுகளேயாகும். ஆனல் இப்போதிருக்கும் இந்த அம்மையின் கோலத்தை மட்டும் அடிப்படை யாகக் கொண்டு காளைத்தேவர் வடிவத்தை மணவழகர் கோலமென் பது மிகவும் தவருன முடிவாகும்.

கல்வெட்டிலும் குறிக்கப்பட்டு, பெரும்பாலும் ஆகம விதி வழியே வார்க்கப்பட்டு விளங்கும் இத் திருமேனிகள் (இறைவனும் காளையும்) செம்பியன் மாதேவியாரால் திருநல்லம் உமைக்கு நல்ல வன் திருக்கோயிலுக்குச் செய்தளிக்கப்பெற்ற காளைத்தேவர் தொகுப்பே என்பதில் எள்ளத்தனை ஐயமும் இனித் தேவையில்லை.

---

8. செம்பியன் மாதேவியார், வெ. வேதாசலம், கல்வெட்டு இதழ், 5., பக். 19.

இணையற்ற பேராசான்

அவனே அறிஞன்—அவனே புலவன்—அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனுன பென் ஜான்சன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது. "அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்" என்றுர் அவர்.

ப. ஜீவானந்தம்.

எண்வர் எண்மணி மாலை

[மருத்துவர் மறையரசன்]

வாழ்த்து :

(கலி விருத்தம்)

கனித்தமிழ்ச் சுவைமொழி கலப்பினை ஏலுமோ ?
நனிப்புகழ் பிறமொழி நடந்திடத் தாங்குமோ ?
பனித்தமிழ்ச் சிறப்புசெய் பணியணி போற்றுமே !
தனித்தமிழ்த் தாளடி தகையென ஏற்றுமே !

1. வீரமாமுனிவர்

(வெண்பா)

கொண்டல்போ தந்தை எலிசபெத்து நல்அன்பு
மண்டலால் வந்த மகவேபாக்—கொண்டல்
எனத்தமிழில் கூட்டும் இசைக்குயிலே உன்னை
நினைந்திடையில் விம்முமெம் நெஞ்சு.

2. பரிதிமாற் கலைஞர்

('சானட்' வகை அகவல்)

நெஞ்சும் நிறைத்து கொஞ்சும் சூரிய
துஞ்சும் தமிழர் துடித்தெழ வைத்தத்
தப்பிப் பிறந்த தமிழ, கைத்த
உப்பில் லாத பிறப்பால் ஆரிய,

வடமொழி பயின்று வளமொடு வாழ்ந்தும்
கடலெனப் பாசுரத் தொகைதரும் போதும்
அடலெனத் தமிழினை ஆய்ந்ததை ஓதும்
நடையுடை யுனையெந் தலையடி தாழ்த்தும் ;

கோவிந்த சிவனர் சேயெனப் பிறந்தெம்
ஆவியுட் கலந்த ஐயா, சூரிய
நாரா யணனே சாத்திரி மாறிய
பேராம் பரிதிமாற் கலைஞனுய்ச் சிறந்தோய்

மனமது தமிழினில் மூழ்கிய தாலே
இனமது கடந்துனை ஏத்துவம் மேலே !

3. மறைமலையடிகள்

(கட்டளைக் கலித்துறை)

மேலான தீந்தமிழ்ப் பேச்சும் எழுத்தும் மெருகுடனன்
பாலான தீஞ்சுவைக் கூட்டெனத் தந்ததோர் பாற்கடலே!
நூலான நின்னுடை ஆராய்ச்சிக் கட்டுரை நோய்தவிர்க்குங்
கோலான தெவ்வகை கூறுதி யோதமிழ்க் கொள்கையனே!

4. பாவேந்தன்

(வஞ்சி விருத்தம்)

கொள்கைப்பிடி தளராதொரு குணமேவிய வேந்து
கள்ளைக்குடி மயக்கந்தரு கருமேவுபா வேந்தி
உள்ளம்படி பழமைத்தனம் உதறுந்தமிழ் மணக்கும்
துள்ளால்நிறை சிந்தைத்திகழ் தந்தைக்கொரு வணக்கம்.

5. பாவாணர்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வணங்குந் தகைசால் தமிழ்மொழியின்
 வலிமை யறிந்த பிறமொழிகள்
இணங்கும் ஏற்கும் எனப்பணிந்தே
 இருத்தல் போலே இருந்துதமிழ்
அணங்கின் பழமைச் சிறப்பழிக்கும்
 அவற்றின் கலப்பைக் கண்டுவெம்பிப்
பிணங்கி ஏற்காப் பாவாணர்
 பிறந்தார் இதுநம் தவப்பேறே!

6. தாமரைத்திரு. வ. சுப்பையா (பிள்ளை)

(மருட்பா)

தவப்பேருய் வந்தவரே தாமரைச் செல்வ!
உவப்போடு நற்சமயம் போற்றி—சிவனியத்தைக்
காக்கப் பிறந்து கன்னற் றமிழ்க்கே
ஆக்கம் காணவே அயரா
போக்கில் வளர்ந்தவுன் பெருமை கூறுமோ?

7. இசைஞாயிறு குடந்தை ப. சுந்தரேசனார்

(சிந்து)

கூறுகின்ற முத்தமிழைக் கூறுபோட நடுவிருந்து
கொஞ்சுகுரல் தருவதிசைத் தமிழே!—உள்ளங்
குளிரவைக்குஞ் செவிவழியிவ் வமிழ்தே!

மாறுபட்ட கலப்பிசையால் வேறுபெயர் கொண்டுவிட
மாசுநீங்க தந்தவோரய் வாளன்—குடந்தை
மன்னுபுகழ்த் தமிழ்ப்பண்ணாய் வாளன்

தஞ்சையதன் சீருயரத் தமிழிசையின் மாண்புயரத்
தளர்ந்ததமிழ் இசையெனவே பேசா
தவகையிலே செய்தசுந்த ரேசா

பஞ்சநதம் குப்பம்மாள் பண்புடைய இல்லறத்தில்
பைந்தமிழைப் பேணவந்த ஐயா—தமிழ்ப்
பரப்பு மிசை ஞாயிறெனல் பொய்யா?

8. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கலிவெண்பா)

பொய்யாய்ப் புனைசுருட்டாய்ப் புற்றீசல் போலெழுந்(து)
உய்யா வகைத்தமிழ்க்(கு) ஊறுசெய்(து)—மெய்யாகத்

தாளிகைகள் எல்லாந் தரங்கெட்டுப் போனபின்னும்
மாளிகையை விட்டிறங்கா மாத்தமிழர்—ஆளுகையில்

நல்ல தனித்தமிழில் தான்நடத்துந் திங்களிதழ்
வெல்லத் தமிழ்ச்சிட்டுந் தென்மொழியும்—சொல்லரிய

வெற்றித் தமிழ்நிலமும் வெள்ளிக் கிழமைதொறும்
பற்றித் தொடர்கின்ற பாவலரே(று)—இற்றைக்குத்

தென்னந் தனித்தமிழில் தித்திக்கப் பாட்டெழுதும்
மன்னன் கனிச்சாறு மூன்றுபடி—உண்ணத்

தருகின்ற ஊற்றருத்தான் தாய்த்தமிழின் காவல்
பெருஞ்சித்தி ரன்புகழைப் போற்றி—அருந்தொண்டை

நாம்தொடர்ந்தால், நல்ல தமிழுணர்வு மேலோங்கி
ஓம்புகின்ற நாள்வந்தால் எப்பகையும் சாம்பரென

ஆடி அடங்காதோ ? ஐயோ எனவரண்(டு)
ஓடி ஒளியுந்தன் ஊர்!

———

சிந்துவெளி எழுத்தும் கீழ்வாலை ஓவியமும்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

(முன் இதழ் ௩௯௩ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வெட்டுகளை ஒப்பிட்டு நோக்கினால் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு தமிழ் எழுத்துகளில் காணப்படும் வேறுபாடுகள் படிப்பவரைத் திகைக்க வைக்கிறது. இங்ஙிலையில், ஆயிரக் கணக்கான ஆண்டுகளில் பல்வேறு காலகட்டங்களில் வெளியிடப் பட்ட சிந்துவெளி முத்திரை எழுத்துகளில், ஒரே எழுத்து காலப் போக்கில் பல்வேறு மாற்றங்களுடன் எழுதப்பட்டிருக்கக்கூடும் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அந்த எழுத்து வடிவ வேறுபாடு, உயிரெழுத்தைச் சுட்டியவை, மெய் யெழுத்தைச் சுட்டியவை, உயிர்மெய்யெழுத்தைச் சுட்டியவை, உயிர் மெய்யொடு புணர்த்தும் உயிரெழுத்து அடையாளம் குறியீடுகளைச் சுட்டியவை, எழுத்துக்கு உள்ளும் புறமும் அல்லது சுற்றிலும் வெவ் வேறிடங்களில் வெவ்வேறு வகைப்படும் குறியீடுகளாக இருப்பவை என்று தெளிவாக வகைப்படுத்தப்பட வேண்டும்.

சிந்துவெளி எழுத்தின் பரவல்:

ஒரே பிள்ளையாக இருந்தால் தந்தையின் சொத்து முழுவதும் அவனுக்கே சேரும். ஒரு தந்தையின் சொத்துகளைப் பலர் பங்கிட்டு எடுத்துக்கொள்ளும்போது, மாடுகள் ஒருத்தனுக்குத் தரப்படின் மற்றவன் ஆடுகளைப் பெறுவான். இரும்புக் கருவிகள் ஒருவனுக்குச் சென்றால் மரப்பொருள்கள் மற்றொருவனுக்குச் செல்லும். இவ் வாறே சிந்துவெளிச் சொற்களும், எழுத்தின் வரிவடிவங்களும் அண்டை அயல்மொழிகளுக்குச் செல்லும்போது ஒவ்வொரு கூறு ஒவ்வொரு மொழியில் இருக்கும். சிந்துவெளி மொழியின் மூல மொழி அல்லது நேர் கால்வழிமொழியில் முழு இயல்புகளும் இருக்க வாய்ப்புண்டு.

சிந்துவெளி மொழியிலும் தமிழிலும் முழுமையான ஒப்புமை களையும், அரபி, அக்கேடியன் முதலிய மேலை மொழிகளிலும் பஞ் சாபி, குச்சரம் முதலிய கீழை மொழிகளிலும் ஒரு சில இயல்புகள் தெளிவாகக் காணப்படுதலையும் அறியலாம். தமிழுக்கே உரிய ட, ண, வளைநா ஒலி எழுத்துகள் சமற்கிருதம் உள்ளிட்ட அனைத்து வட

இந்திய மொழிகளிலும் வழங்குவதையும், ள, ழ, ற ஆகியவை பிராமி, சாதவாகனரின் பிராகிருதம், கன்னடம், தெலுங்கு, ஆகியவற்றில் வழங்குவதையும் காண்கிறோம். னகரம் தமிழிலும் மலையாளத்திலும் சிறந்து விளங்குவதையும், ஒப்பிட்டு நோக்கின் சிந்துவெளி மொழியில் அனைத்து எழுத்தொலிகளும் இருந்திருக்கின்றன என அறியலாம்.

சிந்துவெளி எழுத்தே பல்வேறு இந்திய எழுத்துகளுக்குத் தாயாக விளங்கியிருக்கிறது. சிந்துவெளி எழுத்தை மேற் சதுரமாகவும் நீள் சதுரமாகவும் கோலெழுத்தாக எழுதியபோது பிராமி மற்றும் தேவநாகரியாகவும், வட்டித்து வளைவாகவும் உருண்டையாகவும் கோத்து எழுதும் முறையைப் பின்பற்றிய எழுத்துகள் கிரந்தமாகவும் தென்னிந்திய மொழி எழுத்துகளாகவும் மாறியிருக்கின்றன.

கீழ்வாலை ஓவியங்கள் :

கீழ்வாலை பாறை ஓவியங்களில் காணப்படும் படகும், படகிலுள்ள படகோட்டிகளும் உள்ள ஓவியம் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த ஓவியங்களில் மாந்தர் தலையில் பறவை அலகு போன்ற மூக்கு இருப்பதாகக் கூறுகின்றனர். வல்லூறு மூக்குடைய மாந்த உருவங்கள் எகிப்திய ஓவியங்களிலும் காணப்படுவதால் இதுவும் இத்தகையதாக இருக்கலாம் என்று அறிஞர் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். மேனாட்டு நாகரீகங்களில் பறவை தலையும் மாந்த உடலும் கொண்ட உருவம் இருப்பது உண்மையே. ஆயின், கீழ்வாலையிலுள்ள ஓவியங்களின் மாந்தர் தலை, பறவைகளின் தலையைப் போலில்லை. இவை நிழலோவியம் போல் வரையப்பட்டிருப்பதால் கோட்டோவியம் போல் (line drawing) தெளிவாகக் கண், மூக்கு போன்ற பகுதிகள் காட்டப்பட வாய்ப்பில்லை. இந்த ஓவியங்களில் பறவை அலகு இருக்கும் பகுதி சில ஓவியங்களுக்குத் தலையின் மேற்பகுதியிலும் மற்றும் சிலவற்றிற்கு நடுவிலும் மற்றும் சிலவற்றிற்குத் தலையின் கீழ்ப் பகுதியிலும் காணப்படுகிறது. பறவை அலகு இப்படி தலையின் வெவ்வேறு இடங்களில் இருக்காது. எனவே, பழங்காலத்தில் ஆண்களும் பெண்களும் தம் கூந்தலைக் கொண்டையாகவோ கோடாலி முடிச்சாகவோ, ஒப்பனை செய்துகொள்ளும் வடிவமைப்பே இந்த நிழலோவியங்களில் பறவை அலகைப்போல் காணப்படுகிறது. கொண்டைகள் உருண்டையாக அல்லது நீளுருண்டையாக இருக்கும். அவை பக்கக்கொண்டை, பின்கொண்டை, மேல்கொண்டை, உச்சிக்கொண்டை முன் கொண்டை, பக்கச்சரிவுக்கொண்டை எனப் பலவகைப்படும். கூந்தலின் அடிப்பகுதியை ஒரு கையால் பிடித்து மேற் கையால்

கயிறுபோல் சுற்றி உள்ளே வாங்கி முடிப்பது கோடாலி முடிச்சு எனப்படும். நாட்டுப்புறங்களில் ஆண்களும் பெண்களும் மிக எளிமையாக இவ்வாறு தலையில் முடிந்துகொள்வர். கொண்டை போட வெகு நேரமாகும். கோடாலி முடிச்சை மிக எளிதில் போட லாம். எனவே, கீழ்வாலை நிழலோவியங்களின் தலையில் பறவை அலகு போன்று காணப்படும் உறுப்பு அக்கால மக்கள் கூந்தலை முடிந்துகொண்ட கோடாலி முடிச்சே என்று கருதலாம். கதி ரவனை வழிபடுவதாகக் காணப்படும் ஓவியம் வணங்கும் நிலையில் இல்லை. வணங்குவதாக விருந்தால் இரண்டு உள்ளங்கைகளும் ஒட்டி உயர்த்தியிருக்க வேண்டும். அந்த ஓவியம் களித்துக் கூத்தாடு பவனைப்போல் காணப்படுகிறது.

குதிரையின்மேல் அமர்ந்து இருப்பதாகக் காணப்படும் ஓவியம் உண்மையில் அத்தகையதன்று. குதிரைமேல் அமர்ந்து காணப் படும் ஆடவன் உண்மையில் அந்த விலங்கின் வால்போல் தெரியும் பாறைமீதுதான் அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னால் உள்ள ஓர் ஆடு போன்ற ஒரு விலங்கைத் தெய்வ வழிபாட்டுக்காக அல்லது கொற்றவை (காளி) வழிபாட்டுக்காக எருமைக் கொம்பைத் தலையில் சூட்டிய ஒரு பெண் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறாள். கொற்ற வைக்குக் காவு (பலி) தருவதற்காகப் பூசைக்குத் துணைபுரியும் மற் றோர் ஆடவன் அருகில் நிற்கிறான். காளிக்குக் காவு (பலி) தருபவர்கள் கருங்கோழி, கரும்பன்றி, காராடு ஆகிய முப்பலிகளைத் தருவர் அல்லது எருமைக் கடாவைப் பலியிடுவர். ஆதலின் அப் பெண் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் விலங்கு கருநிற ஆடாக இருக்கவேண்டும். சிந்துவெளி எழுத்து நிலவிய காலத்தில் இந்தி யாவில் எங்கும் குதிரை இருந்ததில்லை. அது குதிரையாக இருந்தால் அந்த மாந்தனுடைய மார்பு உயரத்திற்கு நிற்கவேண்டும். இந்த ஓவியங்களிலுள்ள பாறையை அவ்வூர் மக்கள் இரத்தக்குடைக்கல் என்று கூறுகின்றனர். ஆதலின், தெய்வத்திற்குப் பலி தரும் ஒரு காட்சியே அவ் வோவியங்களில் காணப்படுகிறது என நம்ப லாம். படகு செல்லும் திசையைக் காட்டுவதாகக் காட்டியிருக்கும் அடையாளங்கள் உண்மையில் சிந்துவெளி எழுத்தாக இருக்க வேண்டும். அது 'தா' என்னும் எழுத்தில் தொடங்குகிறது. அதை முழுமையாகப் படிப்பதற்கு மேலும் எழுத்துச்சான்றுகள் பல தேவை.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டது போல் சிந்துவெளி எழுத்துகள் மட்பாண்டங்களிலும் காணப்படுவது அவற்றின் தொல்பழங்கால அடி வரவை உறுதிப்படுத்துகிறது. மட் பாண்டங்களில், குறிப்பிட்ட சில எழுத்துகள் மட்டும் இடம் பெற் றிருக்கின்றன.

பயன்மிக்க, பழைய சில பட்டிமண்டப நிகழ்ச்சிகள்

[ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.]

(முன் இதழ் ௩௯௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

(7) முனிமொழிப் பிரகாசிகை:

இனி, செவ்விய புலமை ஔவைப்பிராட்டியார் அருளிச் செய்த "தேவர் குறளும் திருநான்மறைமுடிபும்-மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை, திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒருவா சகம் என்று உணர்" என்னும் பாடலை, அனைவரும் அறிவர். இதன்கண் 'முனிமொழியும்' என்னும் தொடரைப் பெயரெச்சமாகக் கொண்டு, 'மாணிக்கவாசகர் ஆகிய முனிவர் மொழிந்தருளிய திருக் கோவையார் திருவாசகம் என்னும் இரண்டு நூல்களும்' என்று பலரும் பொருள் கொள்ளுவது வழக்கம். இதனையே யாழ்ப்பாணம் சபாபதிநாவலர், தமது நூல் ஒன்றில் விரிவாக விளக்கி எழுதினர்.

அது பொருந்தாது; 'முனிமொழியும்' என்பது பெயரெச்சத் தொடரன்று; அஃது எண்ணும்மைத் தொடர்; அதற்கு 'வேதவியாசர் ஆகிய முனிவர் இயற்றியருளிய பிரமசூத்திரமும்' என்று பொருள் கொள்ளல் வேண்டும் என்று, சிவத்திரு சோமசுந்தரநாயகர் அவர்கள் எழுதினர். அதனைச் சபாபதிநாவலர், 'அங்ஙனம் பொருள் கொள்ளுதல் பொருத்தமன்று; பிரமசூத்திரம் சங்கரரின் அத்துவைதக் கொள்கையையே கூறுவது ஆதலின்' என்று கூறி, மறுத்து எழுதினர்.

அதற்கு நாயகர் அவர்கள் "பிரமசூத்திரத்திற்குச் சங்கரர் மட்டுமேயன்றி, இராமாநுசர், ஆனந்ததீர்த்தர், நீலகண்டர், பண்டி தாராத்தியர் முதலிய வேறு பிறர் பலரும் உரைசெய்துள்ளனர் ஆதலின், அதனைச் சங்கரரின் அத்துவைதக் கொள்கையை மட்டுமே தழுவியநூல் என்றல் அமையாது; பிரமசூத்திரத்தைச் சங்கரபாடியத் துடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துரைத்த தீபா (Dr. Thibaut) என்னும் ஆராய்ச்சியாளர், தமது முகவுரையில் சங்கரபாடியப் பொருள் பிரமசூத்திரக் கருத்தோடு ஒருசிறிதும் இசைந்து நில்லா மையை விரித்துரைத்து, அந்நூலின் உண்மைப் பொருள்கள் இவை என்று விளக்கியிருப்பன பலவும் 'சித்தாந்தசைவப்' பொருளோடு ஒற்றுமையுற்று நிற்றல் காணலாம்" என்று விடையிறுத்தனர்.

நம் ஆசிரியரின் இக்கருத்தைத் தழுவி வலியுறுத்தும் வகையில், ஆசிரியர் மறைமலையடிகளார் ''முனிமொழிப் பிரகாசிகை'' என்று ஒரு சிறிய, அரிய நூல் எழுதியுள்ளார். 'தேவர் குறளும்' என்று தொடங்கும் ஔவையார் பாடல் உள்ளவரையில், முனிமொழிப் பிரகாசிகையும், அதன் அரிய கருத்துகளும், அறிஞர் உலகில் நிலைபெற்றுப் பயன்படும் என்பது மிகையன்று.

(8) தொல்காப்பியன் :

நம் தமிழ்மொழிக்கே அடிப்படையான உயிர்ப்பளிப்பு நூலாக, மிக்க பழமையும் பெருமையும் முதன்மையும் வாய்ந்து திகழ்வது, ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் ஆகும் என்பதனை, யாவரும் உணர்வர். ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியர் இயற்றியது, தொல்காப்பியம்! '' 'தொல்காப்பியன்' என்னும் பெயரில் உள்ள 'அன்' ஈறுகெட்டு, செயப்படு பொருள் உணர்த்து கின்ற 'அம்' விகுதி புணர்ந்து, தொல்காப்பியம் என்னும் நூற்பெயர் அமைந்தது; அகத்தியம் கபிலம் என்பன போல'' என்று, சேனு வரையர், சிவஞானசுவாமிகள் ஆகியோர் கூறுவர்.

ஆனால், இக் கருத்லைத மறுத்துச் சோழவந்தான் அரசஞ்சண் முகனார், 'தொல்காப்பியன்' என்பதுதான் நூலுக்கும் பெயர்; 'திருவள்ளுவர்' என்னும் பெயர் திருக்குறளுக்கும் உரியதாக வழங்குதல் போல, 'தொல்காப்பியன்' என்னும் ஆசிரியரின் பெயரே, அவரால் செய்யப்பெற்ற நூலையும் குறித்தது. இது கருத்தா ஆகுபெயர் எனப் படும். ஆதலின், 'தொல்காப்பியம்' என்பது தவறு. 'தொல்காப்பியன்' என்றே வழங்குதல் வேண்டும். ''தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி'' எனவரும் பனம்பாரனார் பாயிரமும் இதனை வலியுறுத்தும். செயப்படுபொருள் உணர்த்தும் 'அம்' விகுதி, எச்சம் தேட்டம் நாட்டம் முதலிய சொற்களில், எஞ்சு-தேடு-நாடு-முதலிய வினைப் பகுதிகளொடு கூடியே, செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்னும் ஆறுவகைப் பொருள்களுள், ஒவ்வொன்றனை முறையே உணர்த்திவரும். அ∴தல்லாமல் பெயர்ப் பகுதியொடு கூடி, மேற்குறித்த அறுவகைப் பொருள்களை உணர்த்தி வருதல், யாண்டும் இல்லை என்றார், அரசஞ்சண்முகனார்!

இக் கருத்துப் பூசல் முற்றி முதிர்ந்து, மேலும் மேலும் விரிவடைந்து வளர்ந்தது. அதன் விளைவாக அரசஞ்சண்முகனார், சிவஞான சுவாமிகள் போலத் தாமும் 'தொல்காப்பியப் பாயிரவிருத்தி' என மிகவிரிவான பெருநூல் ஒன்றை இயற்றலாயினர். அ∴து ஏறத்தாழ 250 பக்கங்கள் கொண்டது. அதன்கண் பலவேறு உரையாசிரியர்களின் பிழைபட்ட கருத்துகளையெல்லாம் எடுத்து மறுத்

திருப்பதுடன், சிவஞான சுவாமிகளின் கருத்துகளில் மட்டுமே, 32க்கு மேற்பட்ட கருத்துகளுக்கு, மிக நுட்பமான மறுப்புரைகள் வரைந்துள்ளார்.

இந்நிலையில் சிவஞான சுவாமிகளைத் தெய்வம் எனவே கொண்டு வழிபட்டுவரும் எண்ணில்லாத சிவநெறிச் சான்றோர்கள் பலருள் ஒருவரும், திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் ஆகிய செப்பறைச் சுவாமிகள் என்பவர், அரசஞ்சண்முகனாரின் தடைகளுக்கெல்லாம் தக்க விடைகள் கூறி, ஒரு சிறந்த மறுப்புரை வரைந்துள்ளார்! தமிழ் இலக்கணநூல் புலமைக் கடலில் திளைத்து மகிழ விரும்பும் தமிழறிஞர்களுக்கெல்லாம், இம் மறுப்புரை நூல்கள் பலவும் அரிய பெரிய தமிழ் விருந்தாகும்.

முடிவுரை :

பயன்மிக்க, இந்தப் பழைய சில பட்டிமண்டப நிகழ்ச்சி களைப்போல, இங்குக் கம்பர்கோட்டக் கால்கோள் விழாவில், இப்போது நடைபெறவுள்ள பட்டிமண்டப நிகழ்ச்சியையும், பயன்மிக்க தாய், அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாக அமையவும்—உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகிய வில்லியம் ஷேக்ஸ்பியர், நமது மனித வாழ்வின் இயலைப்பற்றி, 'மகபதி' (Macbeth) என்னும் நாடகநூலிற் கூறுவதுபோல, ''அறிவிலிசொல் கதைபோற் பொருளில் வெறும் ஒளி'' ('Full of sound and fury signifying nothing'') என்பதுபோல முடியாமல், இப் பட்டி மண்டபத்தில் நிகழ்த்தப்பெறவுள்ள அறிஞர்களின் ஆய்வுரைகள் அனைத்தும், அந்த ஷேக்ஸ்பியர் தாமே ''ஒரு நடுவேனில் இரவுக் கனவு'' (A Mid-Summer Night's Dream) என்னும் நாடகத்தில், ''இல்ல தொன்றனையும் ஊர்பேர் இயைபுறப் படைத்துக் காட்டும், நல்லியற் கவிஞர் செய்கை நலம்'' (''The Poet's pen give to airy nothing, a local habitation and a name'') என்று குறிப்பிடுவதுபோல, வறிதே காற்றெடு கரைந்து கரைந்து மறைந்து போகாமல், எழுத்து வடிநலமும் பெற்று, என்றும் எவர்க்கும் பயன்படத்தக்க வகையில் சிறந்து திகழவும் விரும்பி—இப் பட்டிமண்டபத்தினைத் தொடங்கி வைக்கின்றேன்! கவியரசர் கம்பர் புகழ் வாழ்க! அவர் தம் அரிய இனிய கவிதை நலம் வளர்க! வணக்கம், நன்றி!

கம்பன் கவிமாட்சி

"காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்ருச் சுவைதிகழும்;—ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்"*; ஓங்கிஉயர் கம்பர்கவி
மாட்சிக் கிணையுண்டோ? மற்று. (1)

நல்ல பட்டி மண்டபம்

சிந்தனைக்கு நல்விருந்தாய், செம்பொருள்கள் தேற்றுவதாய்ச்,
செந்தமிழ்க்கு ஆக்கமாய்த், தெள்ளியதாய்ச்,—சந்ததமாய்,
நன்றறிஞர் பேசுவதே, நல்லபட்டி மண்டப
இன்பமிகு நிகழ்ச்சி ஆம்! (2)

கண்டும் கேட்டும் மகிழ்வோம்!

கம்பர் கோட்டக் கால்கோள் நல்
விழாவில், பட்டி மண்டபம் ஒன்(று);
செம்பொ ருள்தேர்ந்(து) உயர்அறிஞர்,
கலந்து கொள்ளச் செய்(து), அமைத்தார்;
இன்பம் மிகும்அந் நிகழ்ச்சியினைத்
தொடங்கி வைக்க, எனைப்பணித்தார்;
நன்றி! இதனை நனிகண்டும்,
நயந்து கேட்டும், நாம் மகிழ்வோம்! (3)

—ந. ரா. முருகவேள்

---

* "Age cannot whither her; Nor custom stale
Her infinite variety: other women cloy
The appetite they feed; But she makes hungry
Where most she satisfies"

—*William Shakespeare*
Antony and Cleopatra

போட்டியால் நன்மையா, தீமையா?

நஞ்சிலும் ஒரு நன்மையுண்டு; போட்டியிலும் ஒரு நன்மை உண்டு; ஆனல் அதனல் விளையும் தீமையை மறந்துவிடக் கூடாது. போட்டியால் ஊக்கம் மிகுதியாகலாம். ஆனல் அன்பையும் ஒற்றுமையையும் குலைப்பதில் அதற்கு நிகரானது ஒன்றும் இல்லை என்பதை நன்றாக எண்ணிப் பார்த்தால் உணரலாம்.

முனைவர் மு. வரதராசனர்.

தாயார் பிறந்த இடம் சதுரகிரிப் பட்டணமாம்

[க. சி. கமலேயா]

தாயென்றல் பேயுமிரங்கும் என்பர். பெற்ற தாயைப் பறிகொடுத்த பெண்ணின் நிலே எவ்வாறிருக்கும்? மகள் தாய்வீட்டைப் பற்றிமட்டும் நினேக்கவில்லே. தன்னுடைய தாயின் தாய்வீட்டைப் பற்றியும் நினேந்து மறுகுகிருள். வேறு இடத்தில் திருமணமாகிப் போய்விட்ட மகளுக்குத் தாய்வீட்டு உறவும் குறைந்துவிடுகிறது. தாய்வீடுபற்றிய பசுமை நினேவுகள் காலப்போக்கில் உலர்ந்துவிடுகின்றன. தாய் பிறந்த இடம் சிற்றூர். இருப்பினும் மகளுக்குப் பேரூர்தான். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதன்ரே! பட்டி பட்டணமாகத் தெரிகிறது மகளுக்கு.

"தாயார் பிறந்த இடம் சதுரகிரிப் பட்டணமாம்
தாலிப் பொருத்தமில்லே, தாய் மாமன் சொந்தமில்லே
மாதா பிறந்த இடம் மதுரகிரிப் பட்டணமாம்
மாலேப் பொருத்தமில்லே மாமன் மகன் சொந்தமில்லே."

சதுரகிரி பெயர் பெற்ற புண்ணியத் திருப்பதி. தாய் பிறந்த ஊரை நினேத்தாலே இனிக்கும். மகளுக்குச் சதுரகிரிப் பட்டணம் மதுரகிரிப் பட்டணமாக இனிக்கிறது. தாய்மாமன் வீட்டுறவு விட்டுப்போய் விட்டது. மாமன் மகனுடைய மனேவி வேறிடத்தவள். உறவு முறிந்துவிட்டதை நினேத்துப் புலம்புகிருள் தாயைப் பறிகொடுத்த மகள்.

"தென்னே இலே கொண்டு தெருவோடு போனுலும்
நீ பெற்ற மக்களுக்குத்
தென்னே இலேக்கும் சோறில்லே, தெருவோடும் ஆசையில்லே
வாழை இலேகொண்டு நீ பிறந்த வளேவுக்குப் போனுலும்
நீ பெற்ற மக்களுக்கு
வாழை இலேக்கும் சோறில்லே, வளேவிலேயும் ஆசையில்லே."

தமிழ்ச் சொல்லாட்சி தனி ஆராய்ச்சிக்குரியது. தென்னங்கீற்று, பனேயோலே, வாழைஇலே எனப் பிரித்து வெவ்வேறு சொல் கையாளப்படுகிறது. வாழைஇலேயில் உணவு பரிமாறப்பட்டால் வயிரார உண்ணும்வரை படைக்கப்படலாம். தாய் பிறந்த வளேவிலுள்ள தாய்மாமன் வீட்டில் சோறுமட்டும் கிடைக்கவில்லே என்பதோடு

அவ் வளைவு மேலுள்ள ஆசையும் வற்றிப்போய்விட்டது. தென்னங் கீற்றளவு சோற்றுப் பருக்கைகளும் கிடைக்க வழியில்லையே என்று மகள் அழுகிறாள். தென்னங்கீற்றுக்குத் தென்னை இலை என்ற பெருமையைத் தந்து ஏளனமாகப் பேசுகிறாள் மகள். வளைவு பற்றிய ஆசை வற்றிப்போய்விட்டதோடு வளைவிருக்கும் தெருவோடு போகும் ஆசையும் நாசமுற்றது.

தமிழில் 'பிள்ளை' என்ற சொல் உயர்திணை ஆண், பெண், இருபாலார்க்கும் உரியது, என்றாலும் உயர்வு நவிற்சியாகச் சில அஃறிணைப் பொருளுக்கும் (பிராணிக்கும்) பயன்படுத்தப்படுகிறது. தென்னம்பிள்ளை, கீரிப்பிள்ளை, அணிற்பிள்ளை என்று சொல்கிறோம். ஓரளவு உயரும்வரை தென்னையைப் பாதுகாக்காவிட்டால் பிழைக்காது. எனவே பிள்ளையைப்போன்று காப்பாற்றவேண்டும். மகள் தன்னைத் தென்னம்பிள்ளையாக உருவகப்படுத்திக்கொண்டு அழுகின்றாள்.

"உழுத புழுதியிலே நீ ஊன்றிவிட்ட தென்னம்பிள்ளை
என்னைப் பெற்ற ஆத்தா! நான்
ஊடுருவிக் காய்க்கவில்லை, உட்குருத்து வாடிவிட்டேன்
நடந்த புழுதியிலே நீ நட்டுவிட்ட தென்னம்பிள்ளை
என்னைப் பெற்ற ஆத்தா! நான்
நாடுருவிக் காய்க்கவில்லை, நடுக் குருத்து வாடிவிட்டேன்."

குருத்துவிட்டுத் தானே செடி வளரவேண்டும், குருத்து வாடிவிட்டால் வளர்ச்சியில்லை. பயிர் செழிக்க நிலவளம் பெரிதும் உதவுகிறது. வண்டல்மண் என்றால் திமுதிமுவென்று செடி வளர்கிறது. தோட்டத்து மண் உகந்ததில்லை யெனில் வாய்க்கால் அல்லது கொடிக்காலிலிருந்து மண்ணெடுத்து வந்து தோட்டத்தில் போட்டு வாழையோ தென்னையோ வளர்க்கலாம். இருப்பினும் சில கோளாறுகளினால் அவை தழைப்பதில்லை. மகள் தன் அவல நிலையை அறியாத தாயை நினைத்து அரற்றுகிறாள்.

"வாய்க்காலில் மண்ணெடுத்து
என்னைப் பெற்ற அம்மா நீ
வாழை தழைய வச்ச
நீ பெற்ற மக்கள்
வாழை தழை யவில்லை
நீ பிறந்த வம்சத்தில் ஒட்டவில்லை
வைகுண்டம் சேர்ந்தாயம்மா."

"கொடிக்காலில் மண்ணெடுத்து
என்னைப் பெற்ற அம்மா நீ,

கொழுந்து தழைய வச்ச!
நீ பெற்ற மக்கள்
கொழுந்து தழையவில்லை
நீ பிறந்த வம்சத்தில் ஒட்டவில்லை
சொர்க்கலோகம் சேர்ந்தாயம்மா.''

'வைத்தாய்' என்பது 'வச்ச' என்று பேச்சு மொழியில் வழங்குகிறது.

உடம்பு உணவாலாகிய பிண்டம். உழவுத் தொழில் இல்லையேல் உணவுக்கு எங்குப் போவது? எனவேதான் திருவள்ளுவர் 'உழுவார் உலகத்தார்க் காணி' என்ருர். பயிர்த்தொழிலை நிரலிட்டபடி செய்யவேண்டும். தலைமழை பெய்ததுமே ஈரப்பதம் பார்த்து நிலத்தை உழவேண்டும். தலைமழை காட்டில் உள்ள பருத்த அரையுடைய மராமரம் இருள் கவியுமாறு அடர்ந்த கிளைகள் பெற உதவுகின்றன என்பார் திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர். தலைமழை பெய்யவும் நிலமகள் புன்முறுவல் பூக்கிருள்.

''தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மரா.''
(திருமுருகாற்றுப்படை வரிகள்)

அகல உழுவதினும் ஆழ உழுவது சிறந்தது. உழுதபின் உழுத புழுதியின் ஒரு பலம் மண் கால்பலமாகக் குறையும்படி காயவிட்டால், ஒரு கைப்பிடி எருகூட இல்லாமல் நல்ல விளைச்சல் கிடைக்கும். உழுவதோடு நின்றுவிடக்கூடாது. அதனினும் சிறந்தது எருப் போட்டுக் களை எடுப்பது. பின்பு தண்ணீர் பாய்ச்சுவது. அதனினும் சிறந்தது நிலத்தைக் காப்பது. நிலத்தை அடிக்கடி சென்று பார்க்காது வீட்டில் நிலத்திற்குரியவன் முடங்கிக் கிடந்தால் நிலமும் இல்லாள் போல் அவனேடு ஊடிவிடும். இவ்வாறு நிரலிடுகிறது திருக்குறள். தண்ணீர் பாய்ச்சிய நிலத்தை நன்ருகத் தொளிகலக்கி (தொளி-சேறு) ஒரே சீராக இருக்கப் பரம்படித்துப் பின்னர் நெல் நாற்றை நடவேண்டும். தொளி கலக்குவதைப்பற்றிக் கம்பருடைய 'ஏரெழுபது' நூலில் பாடல் ஒன்று சொல்வதாவது:

''வெறுப்ப தெல்லாம் பொய்யினையே வேளாளர் மெய்யாக
ஒறுப்ப தெல்லாங் கலியினையே யுள்ளத்தால் வெள்ளத்தாற்
செறுப்ப தெல்லாம் புல்லினையே செய்யின்வள மறிந்தறிந்து
மறிப்ப தெல்லாம் சேற்றினையே வளம்படுதற் பொருட்டாயே.''

சேறுசெய்தல் என்பதைத் தொளிகலக்குதல் என்று சொல்வதுண்டு

இறந்துபோன தாயை எண்ணி அழும் பெண் வேளாண்மைத் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவளாதலால் அத் தொழில் பற்றிய விவரங்களைச் சொல்லி அழுகிருள;

''ஆற்றைத் தொளி கலக்கி அடுக்குச் சம்பா நெல்விதைத்து
ஆற்றுத் தண்ணி வத்த வத்த என்னைப் பெற்ற அம்மா
நீ பெற்ற மக்கள் நாங்கள்
அடுக்குச் சம்பா வாடுகிறோம்
குளத்தைத் தொளி கலக்கிக் குலைவாழை நெல்விதைத்து
குளத்துத் தண்ணி வத்த வத்த, என்னைப் பெற்ற அம்மா
நீ பெற்ற மக்கள் நாங்கள்
குலைவாழை வாடுகிறோம்.''

[தண்ணி - தண்ணீர் : வத்த வத்த - வற்ற வற்ற]

நெற்சாகுபடியில் குறுகிய காலத்தில் விளைச்சலை எடுப்பது ஒரு வகையாகும். முன்னர் சொன்னபடி நடுகை எல்லாம் வேண்டிய தில்லை. நெல்லை விதைத்து வளரவிட்டு அறுவடை செய்வதும் உண்டு. தாயை நினைத்து அழும் பெண் நமக்குத் தரும் தகவல்கள் பல. ஆற்றுப் படுகையிலும் குளத்துப் படுகையிலும் தொளி கலக்கிக் குறுகிய கால நெற் பயிர் சாகுபடி செய்தல், நடுகையின்றி விதை விதைத்தல், நெல் வகைகள் ஆகியவை மகளுடைய ஒப்பாரியில் இடம் பெறுகின்றன. நெல் வகைகளில் சம்பா ஒருவகை. சம்பா நெல்லிலும் பல வகையுண்டு. மிளகு சம்பா. சீரகச் சம்பா, தொப்பிச் சம்பா என்பவை சில. அடுக்குச் சம்பா என்ற இன்னொரு வகை யையும் நாம் அறிகிறோம். குலைவாழை நெல் என்ற பிறிதொரு வகை நெல்பற்றியும் மேற்கண்ட ஒப்பாரிப் பாடலிலிருந்து தெரிந்து கொள்கிறோம். ஆற்றிலும் குளத்திலும் தண்ணீர் வற்ற வற்றப் பயிர் வாடுகிறது. தாயாகிய நீரின்றி வாடுகிற அடுக்குச் சம்பாப் பயிராய்க்—குலைவாழை நெற் பயிராய் இருப்பதாகத்—தன் நிலையை மகள் அழும்போது ஒப்பாரி வைத்துப் புலம்புகிறாள்.

— - —

வலமா? இடமா?

கி. மு. 500-ஐ ஒட்டித்தான் கிரேக்கர்கள், நாம் இப்போது செய்வதுபோல, இடப்புறமிருந்து வலப்புறமாக எழுதவும் படிக்க வும் தொடங்கினர். அதற்கு முன் வலப்புறமிருந்து இடப்புற மாகவும், தொடர்ந்து, இடப்புறமிருந்து வலப்புறமாகவும் மாறி மாறிப் படித்தனராம். ஏனெனில், பழங்காலக் கிரேக்கர்களுக்கு எந்தப் பக்கமாக எழுதிப் படிப்பது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லையாம்.

நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக்கழகம்

கலைக்களஞ்சியக் கலை

[திரு சிறுவை. மோகனசுந்தரன் அவர்கள்]

(முன் இதழ் சகஉ ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு பொருளைப்பற்றியும் தனித்தனியாகச் சிறப்புச் செய்திகளை அறிந்துகொள்ளவும் ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனி தொகுதிகள் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

- கணிதம், மருத்துவம், தொழில் நுட்பவியல், எந்தி ரங்கள்—இதுவரை 16 தொகுதிகள்.
- கட்டடப் பொறியியல் வேளாண்மை—24 தொகுதிகள்.
- விலங்குகள்—3 தொகுதிகள்.
- பறவைகள்—3 தொகுதிகள்.
- பாம்புகள்—1 தொகுதி.
- முக்கியச் செடி கொடிகள்—5 தொகுதிகள்.
- தோட்டக்கலை—1 தொகுதி.
- Encyclopaedia the unexplained (Magic, Oceultism and Parapsycology) 1974இல் 1 தொகுதி.

இவை ஒவ்வொன்றிலும் மிக அழகிய வண்ணப்படங்கள் அமைந்துள்ளன. செடிகள், பாம்புகள், பறவைகள், விலங்குகள் பற்றிய படங்கள் அவற்றின் இயற்கை வண்ண அமைப்புடனே வண்ண ஒளிப்படம் எடுத்துப் பதித்துள்ளனர். இவற்றையெல்லாம் கண்டு வியந்து ''மெத்த வளருது மேற்கினிலே'' எனப் பெருமூச்சு விடுகிறான் பாரதி. நமது நாடு இத்தகைய பணியில் எப்பொழுது ஈடுபடும் என்பதை எண்ணிப் பார்த்தும் சோதிடம் கணித்தும் சொல்ல முடியாத ஒரு தவிப்பு உள்ளது எனின் மிகையாகாது.

அடுத்து இந்திய நாட்டின் நிலைமைபற்றிச் சிந்திப்போம். இந்திய மொழிகளிலேயே தமிழ்மொழியில்தான் முதன்முதலில் தமிழ்க் கலைக்களஞ்சியம் பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தை முன் மாதிரியாகக் கொண்டு தோன்றியது. முதன்முதலில் அதனை ஒழித்துக் கட்டியதும் கல் தோன்றி மண் தோன்று இந்த மூத்த தமிழ்க் குடிமக்களால்தான். இது நிற்க. கலைக்களஞ்சியம் என்ற சிந்தனை இதற்கு (இப்பொழுதுள்ள தமிழ்க் கலைக்களஞ்சியத்திற்கு முன்பே) தமிழில், வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, வங்காளி ஆகிய மொழியாளர்கள் சிந்தித்து உள்ளனர்,

இனித் தமிழில் கலைக்களஞ்சியம் என்பதைப்பற்றியும் அதன் பயன் முறைகளையும் சிந்திப்போம். தமிழ்க் கலைக்களஞ்சிய அமைப்பு 1948இல் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராய் இருந்த திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தோற்றுவித்த முயற்சி. கலைக்களஞ்சியம் பதிப்பிக்க வேண்டும் என அறிக்கை வெளியிட்டபோது மக்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் நன்கொடை வழங்கி ஒரே நாளில் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் வசூலாகியது. தேசத் தொண்டர் திரு. பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி. எல். அவர்கள் தலைமைப் பதிப்பாசிரியராய் அமைந்து கலைக்களஞ்சியப் பணியை மேற்கொண்டார்.

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கு முதலில் அறிவுத் துறைகளை வகைப்படுத்திப் பகுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அத் துறைகளை ஒழுங்குமுறை செய்து ஒவ்வொரு துறையிலும் உள்ள பல்வேறு பிரிவுகளையும் தொகுக்க வேண்டும். திட்டங்கள், செயல்பாடுகள் முதலியனவற்றைச் சிந்தித்து, பொருட்குறிப்பு அட்டவணையும், அப் பொருள் குறித்துக் கட்டுரைகள் எழுதும் ஆசிரியர்கள் பெயர்ப் பட்டியல் முதலியவைகளையும் அகரவரிசையில் அமைத்துக்கொள்ள வேண்டும். கலைக்களஞ்சியப் பணி சீர்பெற நடைபெற அயலவர் குறிப்பையும் மனத்தில் கொண்டு கலைக்களஞ்சியச் செயல்முறைகள் எப்படி அமைந்தால் சிறந்த வகையில் உருவாக்க முடியும் என்ற அட்டவணையைச் சேர்த்துள்ளேன். மேலும் அதே அட்டவணையில் மிக முக்கியமான அறிவுத்துறை பொருட்குறிப்பு வகைப்படுத்தித் தந்துள்ளேன் (பார்க்க: அட்டவணைகளை).

பொருட்குறிப்பு பட்டியல் அமைக்கும் முறை, கட்டுரையாளர்களின் பெயர்ப் பட்டியல் அமைத்தல்.

அட்டவணை 3

வெளியார் எழுதும் கட்டுரைகள்

60	அகத்தியர்
வரிகள்	(தமிழ்)
பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார்	
	0

அட்டவணை 3-1

கட்டுரையாளர் முகவரி

டாக்டர் மு. வரதராசனார்
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -5.
அகத்தியர்
(தமிழ்) O

அட்டவணை 3-2

அலுவலக ஆசிரியர் குழு எழுதும் கட்டுரை

10 வரிகள்	அருவாளர்
	(வரலாறு)
	அலுவலகம்
	O

இந்த முறைகள், அட்டை ஒன்றில் தமிழ்த்துறைப் பகுதியில் உள்ள அகத்தியரைப்பற்றி இன்னவர் கட்டுரை எழுதும்படி வேண்டியுள்ளது, அக் கட்டுரையின் அளவு என்ன என்பதையும் குறிக்கும். அட்டை இரண்டில் மேற்படி கட்டுரையாளர் தம் கட்டுரையைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சேர்ப்பிக்கவில்லை எனின் அவருக்கு நினைவு மடல் எழுதப் பயனாகும் அவரது முகவரி. மூன்றுவது அட்டையில் குறித்த கட்டுரை அலுவலக ஆசிரியர்கள் குழுவால் எழுதப்படுவது.

ஒரு கலைக்களஞ்சியம் அமைக்க மேற்கொள்ளும் செயல்முறைத் திட்டம்

அட்டவணை 4

தலைவர்
|
துணைத் தலைவர்
|
செயலாளர்
|
தலைமைப் பதிப்பாசிரியர் (பதிப்பாசிரியர் குழுவின் தலைவர்)
|
பதிப்புக்குரிய திட்டக் குழு — பதிப்புக்குரிய செயல்துறைக் குழு
|
மேலாளர்
|
தலைமைப் பதிப்பாசிரியர்
|
பதிப்பாசிரியர்கள் குழு

1.	தமிழ் —>	இலக்கியம் இலக்கணம்	மொழியியல்	9
2.	உயிரியல் தாவரவியல் விலங்கியல் புவியியல் காட்டியல்	காப்பியம் புராணங்கள் பாடல்கள் நாடகங்கள் கதைகள் உரைநடை வளர்ச்சி இன்னபிற	பொறியியல் தொழில் நுட்பவியல் போரியல் சுரங்கவியல்	10
	தத்துவம் சமயம்	புகழாளர்கள் (மறைந்த)	சட்டம் அரசியல்	11

	உளவியல்	தொல்காப்பியர்		
3.	அளவையியல்	பவணந்தி	மருத்துவம்	
	அறிவியல்	சேக்கிழார்	ரணசிகிச்சை	
		கம்பர்	உணவியல்	
		அப்பர், மகாத்மா,	உடலியல்	12
4.	ஆங்கிலம்	பாரதி, திரு. வி. க.	உடல் நலவியல்	
	நாடகம்	மு. வ.	கால் நடை	
5.	இசை, நடனம்		மருத்துவம்	
	மானிடவியல்	ஆங்கிலமும்	கணிதம்	
6.	தொல்	தமிழைப் போல	வானவியல்	13
	பொருளியல்		புள்ளிஇயல்	
	இயற்பியல்			
7.	வேதியியல்		சமஸ்கிருதம்	
			மலையாளம்	14
	ஓவியம்		தெலுங்கு	
8.	சிற்பம்		கன்னடம்	
	கட்டடச் சிற்பம்		உருது	
			வேளாண்மை	15

மொழிநடைப் பதிப்பாசிரியர்
(Language Editor)

திட்டப் பதிப்பாசிரியர்

செயல்துறைப் பதிப்பாசிரியர்

கலை இயக்குநர்

பொருளடக்கம் தொகுப்பாளர்

நூலடைவுப் பட்டியல் தொகுப்பாளர்

படிகளைச் சரிபார்ப்போர்

படிகளைச் சரி பார்ப்போர் மேற்பார்வையாளர்

|

அச்சுக் கலைஞர்

|

பிழை திருத்துவோர்

|

பிழைதிருத்தும் பதிப்பாசிரியர் (Proof Editor).

அட்டவணை 4இல் சில முக்கியப் பொருட் பிரிவுகளைக் காட்டியுள்ளேன். இப் பிரிவுகளின் கட்டுரைகள் சுமார் 50 சதவிகிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வரும். அக் கட்டுரைகளை அலுவலகத்தில் உள்ள ஆசிரியர்கள் குழுவினர் மொழியாக்கம் செய்வர். அங்ஙனம் மொழியாக்கம் செய்த கட்டுரைகள் மொழிநடைப் பதிப்பாசிரியரின் பார்வைக்குச் சென்று தட்டச்சு செய்து மீண்டும் மூலத்துடன் ஒப்பிட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் எழுதிய அக் கட்டுரையாளருக்கு அனுப்பப்பெறும். அவர் தம் கட்டுரையில் உள்ள குறிப்புகள் அனைத்தும் சரி பார்த்து, கருத்துப் பிழைகளைக் கவனித்து, அக் கட்டுரைக்கு உரிய விளக்கப்படங்களை நிழற்படமாகவோ, வரைபடமாகவோ குறித்து அனுப்புவர்.

கட்டுரையாளர் அக் கட்டுரையை அனுப்பிய பின்னர் மேலும் அக் கட்டுரையை மதிப்பீடு செய்ய அப் பொருளினை ஆய்வு செய்யும் அறிஞர் குழுவுக்கு அனுப்பப் பெறும். அது அறிஞர் குழு ஒப்புதல் பெற்று வந்த பின்னர் அச்சுக்கு அனுப்ப முறைப்படி ஒழுங்கு செய்யப்பெறும். கட்டுரைக்கு வேண்டிய நிழற்படங்கள், வரைபடங்கள் ஏற்கெனவே வேறு அறிவியல் புத்தகங்களில் வெளிவந்தவையாக இருக்கும். ஆகவே அப் படங்களை இங்குப் பதிப்பிக்க அப் பதிப்பாளர்களிடத்தில் ஒப்புதல் பெற வேண்டும். முறைப்படி வேண்டுதல் செய்து, அங்ஙனம் அவை ஒப்புதல் பெற்றுவந்த பின்னர் நாம் வெளியிடும் கட்டுரையின் அளவுக்கு ஏற்றவண்ணம் சுருக்கியோ, பெருக்கியோ அளவிட்டு அரிச்சித்திரம் (Blocks) செய்ய அனுப்பி அச்சகத்திற்கு அனுப்ப ஆயத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கட்டுரைகள் அச்சுக்குத் தர ஆயத்தம் செய்யும்போது அக் கட்டுரைகளை எடுத்து அகரவரிசைப்படுத்த வேண்டும். அகரவரிசைப்படுத்திப் பக்க எண்களை மிகவும் விழிப்புடன் தவறு செய்யாமல் குறிக்க வேண்டும். குறித்த பின் பக்க எண்களை மீண்டும் சோதித்துத் தலைமைப் பதிப்பாசிரியர் பார்வைக்கு வைக்கவேண்டும். ஒருமுறை அச்சுக்குப் போக, சுமார் 50 கட்டுரைகளாகப் பிரித்தல்

வேண்டும். ஒட்டு மொத்தமாகத் தருதல் கூடாது. ஏன் எனில் சில் கட்டுரைகளில் வரும் கருத்து முடிபுகள் ஆய்வுகளுக்கு ஏற்ப நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கும். எடுத்துக்காட்டாக வேதிஇயலிலும், இயற்பியலிலும் அவ்வாருன மாறுதல் காணலாம். கட்டுரைகளைத் தலைமைப் பதிப்பாசிரியர் பார்த்த பிறகு அந்தந்தப் பொருள்துறை ஆசிரியர்கள் கட்டுரைகளின் இடையே விளக்கப் படங்கள் எங்கெந்த இடங்களில் அமைக்க வேண்டும் எனக் குறிப்பர்.

பின்னர் கட்டுரைகளில் அமையும் தலைப்புகளுக்கு எந்தவித அச்சு வடிவம், அவ்வெழுத்து எந்தப் புள்ளி அளவில் (Point system) அமைய வேண்டும் எனவும், துணைத் தலைப்பு எந்தப் புள்ளி அளவில் எந்தவித அச்சில் அமைய வேண்டும் எனவும், ஒரு சில பொருள்களுக்கு மையத் தலைப்பு (Centre Heading) எப்படி இருக்க வேண்டும் எனவும் கட்டுரையின் ஊடே குறிக்கப்பெறும் முக்கியக் குறிப்பின் சொற்களை எந்தவித எழுத்து வடிவ அமைப்பில் அமைத்தல் வேண்டும் என்பன போன்றவைகளைக் கட்டுரைகளின் பிரதிகளிலேயே குறித்து அச்சுக் கோக்க அனுப்பப்பெறும்.

அச்சுக் கோத்த பின்னர் காலி புருப், பக்கப் புருப், பாரம் புருப் என மூன்றுமுறை பிழை திருத்த அனுப்புவர் பக்கப் புருப் வந்த போது பிழை திருத்தும் பதிப்பாசிரியர், 1. கட்டுரைகள் அகர வரிசை சரியா? 2. தலைப்புகள் துணைத் தலைப்புகள் சரியாக உள்ளனவா? 3. விளக்கப் படங்கள் பொருத்திய இடங்கள் சரியாக உள்ளதா, 4. விளக்கப் படங்களின் கீழ் உள்ள அப் படங்களின் தலைப்புகள் சரிதாஞ, கட்டுரைகளின் முடிவில் கட்டுரையாளரின் தலைப்பு எழுத்து (Initials) பிழை இல்லாமல் அமைந்திருக்கிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டும். கட்டுரையின் உள்ளே வரும் எண்கள், சில குறியீடுகள் சரிதாஞ என்று பார்க்க வேண்டும். கட்டுரைகளின் இடையே வரும் ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்ய மொழிச் சொற்கள், பெயர்கள் முதலியவற்றின் உச்சரிப்பு (Pronounciation) சரியா என்பதையும் பார்க்க வேண்டும். சில் கட்டுரைகளின் இடையே ஒரு மலையைப்பற்றிக் குறிப்பு இருக்கும். அந்த மலையின் கிழக்குப் பகுதியில் இருப்பது நிலப்பரப்பா, ஏரியா என்றெல்லாம் விழிப்புடன் கவனிக்க வேண்டும். ஒரு முறைக்கு இரண்டு முறை தலைமை அச்சுப்பிழை திருத்துவோர் பாரம் புருப் பார்த்து—தலைமைப் பதிப்பாசிரியர் உத்தரவு பெற்று பின்னர்தான் பாரம் அச்சடிக்க உத்தரவிட வேண்டும்.

தலைப்புகள், துணைத் தலைப்புகள்பற்றிய குறிப்பு, ஒரு சில பொருள்கள் பல்வேறு கிளைகளாகப் பிரியும். மூலப் பொருளின்

தலைப்பு (Heading) கிளைப் பொருள்கள் (அதாவது மூலப் பொருளினைத் தழுவியது) துணைத் தலைப்புகள் (Sub heading) ஆகும். எடுத்துக்காட்டாக,

1. இந்தியா (தலைப்பு)—இது வரலாறுபற்றியது. புவியடுக்கியல், தட்ப வெப்ப நிலை — தாவரங்கள் — விலங்குகள் — மானிடவியல்— மக்களினங்கள்—மக்கள்தொகை —ஆதிக் குடிகள் (இப்படி விரிந்து செல்லும்) } துணைத் தலைப்புகள்

2. கோழிகள் (தலைப்பு) — இது விலங்கியல் பற்றியது. கோழி வகைகள்— லெக்ஹார்ன் கோழிகள்— கருப்பு மினுர்க்கா—ரோடு ஐலண்டு சிவப்பு — வெளுப்பு சஸெக்ஸ் (இங்ஙனம் விரியும்) } துணைத் தலைப்புகள்

இதில் ஒரு சிறு குறிப்பு: 'நன்னூல்' என்ற கட்டுரை வரும் போது அதன் துணைத் தலைப்பாக 'பவணந்தி'யைக் குறிப்பதில்லை. பவணந்திபற்றித் தனித் தலைப்பாக வரும்.

அனைத்துப் பாரங்களும் அச்சடித்த பின்னர், முன்னுரை, கலைக் களஞ்சியச் செயற்குழுவினர் பட்டியல், பொருள் பட்டி அமைப்புக் குழுவினர் பட்டியல், கலைச்சொற் குழுவினர் பட்டியல், கட்டுரைகள் மதிப்பீடு செய்யும் மேல் மட்டக் குழுவின் பட்டியல், அலுவலக ஆசிரியர்கள் குழு பட்டியல், அத் தொகுதியில் இடம்பெறும் கட்டுரையாளர்களின் பெயர்ப் பட்டியல், திட்டமிடுவோர், ஓவியர், தலைமை அச்சுப் பிழை திருத்துபவர் பெயர், குறியீட்டு விளக்கங்கள் (எ. கா : அமெரிக்க ஐக்கிய நாடுகள்—அ. ஐ. நா. பதவிக் காலம்— ப. கா. மில்லி மீட்டர்—மி. மீ.), தமிழ்நூல்கள்பற்றிய குறியீட்டு விளக்கம் (எ. கா. அகநானூறு—அகம்., நவநீதப் பாட்டியல்—நவ., வெண்பாப் பாட்டியல்—வெண்.), பிறமொழி உச்சரிப்பைக் காட்டும் பட்டியல்—ஆகிய இவைகளையெல்லாம் தொகுத்து முறைப்படுத்திய பின்னர் கட்டடம் (Binding) செய்யவேண்டும்.

(தொடரும்)

சங்க நூல்களில் ஆமைகள்

[பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)]

(TORTOISES AND TURTLES)

வயலாமை :

''வரிமணல் அகல் திட்டை
இருங்கிளை இவன் ஒக்கல்
கருந் தொழில் கலி மாக்கள்
கடல் இறவின் சூடு தின்றும்
வயல் ஆமைப் புழுக் குண்டும்
வறள் அடும்பின் மலர் மலைந்தும்''
—பட்டினப்பாலை 60-65

''வள் உகிர வயல் ஆமை
வெள் அகடு கண்டன்ன
வீங்கு விசிப் புதுப் போர்வைத்
தெண் கண் மாக்கிணை இயக்கி'' —புறம். 387

''ஆர்குருகு உறங்கும் நீர்சூழ் வளவயல்
கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயில் கொள்ளும்
நெல்லுடை மறுகின் நன்னர் ஊரே'' —அகம். 306

''பழன யாமைப் பாசறைப் புறத்துக்
கழனி காவலர் சுடுநந் துடைக்கும்'' —நற்றிணை. 280

''நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கிற்
பின்னை மறத்தோ டரியக் கல்செத்
தள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்'' —புறம். 379

''குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை
அரிப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயிற் பொய்கை யூரநீ'' —ஐங்குறுநூறு 81

''தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே'' —குறுந்தொகை 152

''செஞ்சோற்ற பலி மாந்திய
கருங்காக்கை கவவு முனையின்
மனைநொச்சி நிழலாங்கண்
ஈற் றியாமை தன்பார்ப் போம்பவும்''
—பொருநராற்றுப்படை 183-186

மேற்காட்டிய பாடல்களில் தரையில் வாழும் ஆமை (Land tortoise) பற்றிக் கூறப்பட்டுள்ளது. தரையில் வாழும் ஆமையை 'வயல் ஆமை' என்றும் 'பழன ஆமை' என்றும் அழைத்தனர். இந்த ஆமை பெரும்பாலும் தரையிலே காணப்படும். வெயில் நேரத்தில் நீரில் நீந்தும். குளிர்காலத்தில் கால்களை உள்ளிழுத்து அசையாது கிடக்கும். இதன் நகங்கள் கூர்மையானவை. மேலோடு கருமையாக இருக்கும். அடியில் காணப்படும் ஓடு ஒரு சிறிது வெண்மையாக இருக்கும். 'வெள் அகடு கண்டன்ன வீங்குவிசிப் புதுப்போர்வை' என்று உவமித்திருப்பதைக் காணலாம். இந்த ஆமையின் மேற்புறமும் அடிப்புறமும் மஞ்சள் நிறத்தில் நடுவிலிருந்து செல்லும் கதிர் போன்ற வரிகள் உண்டு. இவ் வரிகள் போன்று பெரிய கிணைப் பறையை மூடிய விக்கு விசித்துக்கட்டிய புதுப் போர்வை இருந்ததென்று புறநானூறு (136) கூறியுள்ளது. ஆமைக்கல் என்பதற்குத் தரையில் பதிக்கும் ஆறுகோணமுடைய கல் என்று வின்சுலோவின் அகராதி கூறுவதைக் கவனிக்கவேண்டும். புறநானூற்றுப் பாடலில் (379) கல்லெனக் கருதி ஆமை ஓட்டில் மழுங்கிய கூர்வாளைத் தீட்டியதாகக் கூறியதை இது சார்பாகக் கவனிக்கவேண்டும். வயலாமை முட்டையிடுவதைப்பற்றியும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"கேழ லுழுத இருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்
தேனா ரும்பற் கிழங்கொடு பெறூஉம்" —புறம். 176

பன்றிஉழுது எடுத்த வயல் ஆமை முட்டையை உணவாக ஆம்பல் கிழங்கொடு பெறுவர் என்று புறநானூறு கூறுகின்றது. ஆமை களில் தரையில் வாழும் ஆமைதான் கால்களை நன்கு உள்ளிழுத்து மூடிக்கொள்ளும். இந்த ஆமையைத்தான் "ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப் புடைத்து" என்று வள்ளுவர் கூறினார். நீரில் வாழும் ஆமைகள் கால்களை முழுவதும் உள்ளிழுத்துக்கொள்ள முடியாது. ஆமைகளில் தரையில் வாழும் ஆமை நீண்டகாலம் வாழக்கூடியது. நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழும். உலகில் வாழும் உயிர்களில் ஆமைதான் நீண்டகாலம் வாழும் உயிர் என்று கண்டுபிடித்திருக் கிறார்கள். வயலாமையை Textuda elegans என்று அறிவியலில் அழைப்பர். Starred tortoise என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

குளத்து ஆமை :

"தேளந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை" —புறம். 70

"கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்பக்
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ
எரிப்பூம் பழன நெரித்துடன் வலைஞர்
அரிக்குரற் றடாரியின் யாமை மிளிரப்
பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொ
டுறழ்வே லன்ன வொண்கயல் முகக்கும்" —புறம். 249

"நெடுங்கால் மாஅத் தூழுறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்" —அகம். 117

"பிணங்கரில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயின் முனை இய வள்ளுகிர் யாமை
நொடிவிடு கல்லிற் போகி அகன்றுறைப்
பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்
உகுவா ரருந்து மகிழ்பியங்கு நடையொடு
தீம்பெரும் பழன முழக்கி அயலது
ஆம்பல் மெல்லடை யொடுங்கும் ஊர" —அகம். 256

"மேற்றுறைக் கொளீஇய கழாலிற் கீழ்த்துறை
உகுவார் அருந்தப் பகுவாய் யாமை
கம்புள் இயவன் ஆக விசிபிணித்
தெண்கட் கிணையிற் பிறழும் ஊரன்" —அகம் 356

"கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்" —புறம். 42

"கரியாப் பூவிற் பெரியோர் ஆர
அழலெழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு"
—அகம் 361

"ஆமை யகடுபோ லங்கட் டடாரி" —பு. வெ. வாகை. 32

"யாமை யள்ளகட் டன்ன வரிக்கிணை"
—பு. வெ. பாடாண். 18

மேற்கண்ட செய்யுட்களில் குளத்து ஆமையைப்பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம். ஆமையை வேள்விச் சடங்கிற்குப் பயன் படுத்தியதைப்பற்றி அகநானூறு 361ஆம் பாட்டு கூறியுள்ளது.

"கொலைஞர் உலைஏற்றித் தீமடுப்ப ஆமை
நிலைஅறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் கொடுங்கூற்றம் கோள் பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு" —நாலடியார். 34

ஆமையின் பேதைமையைக் குறித்து இப் பாடலில் கூறப் பட்டுள்ளது. சீவகசிந்தாமணியும் இச் செய்தியைக் கூறியுள்ளது. "நெடுமணி யூபத் திட்ட தவழ்நடை யாமை நீணீர்த், தொடுமணிக் குவளைப் பட்டம் துணையொடு நினைப்ப தேபோல்" (2878) என்ற

வரிக்கு 'யாகத்துக்கு இட்ட தறியிலே யாமை தான் கிடக்கும் பொய்கையையும் துணையையும் நினைக்குமாறு போல' என்று உரை கூறப்பட்டுள்ளது. அதனால் யாககுண்டத்தில் ஆமையைப் போடுவது ஆரியருடைய வழக்கம் என்று தெரிகின்றது. குளத்து ஆமை கிணைப்பறை போல இருந்தது என்பது கவனிக்கத்தக்க தாகும். நீரில் விழும் மாம்பழத்தை ஆமை தின்றதாகக் கூறியதும் இயற்கையான செய்தியே. குளத்து ஆமையை அறிவியலில் geoemyda trijuga என்றழைப்பர். இதை 'பாலாமை' என்று இக்காலத்தில் அழைக்கின்றனர் ஆங்கிலத்தில் water tortoise என்றழைப்பர்.

கடலாமை :

"அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணற் பக்கம் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்பிட னுகு மளவைப் பகுவாய்க்
கணவ னோம்புங் கானலஞ் சேர்ப்பன்." —அகம். 160

கடல் ஆமையைப் (Turtles பற்றியும் சங்கநூல்களில் ஒரு பாட்டு கூறியுள்ளது. இந்த ஆமை முட்டைகள் இடுவதாகவும் அதை வெண்மணலில் மறைத்துப் புதைத்ததாகவும் கூறப் பட்டுள்ளது. இந்த முட்டைகளிலிருந்து ஆமையின் பார்ப்பு வெளி வரும்வரை அதனுடைய கணவன் பாதுகாப்பதாகவும் அகநானூற்றுச் செய்யுளில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம் ஆனால் பெண் ஆமை முட்டைகளை மணலில் மறைத்துப் புதைத்துவிட்டுப் போய்விடுகிறது. அவைகளைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஆண் ஆமையும் அதைப் பாதுகாப்பதும் இயற்கையில் இல்லை. இயற்கையில் இச்செய்தி கற்பனையாகும். மற்றும் ஒரு பரம்பரைச் செய்தி வழங்குவதையும் காணலாம். ஆமை தன் முட்டைகளைக் கண்ணாலே பார்த்தே பொரிக்க வைப்பதாகவும் ஒரு நம்பிக்கை மக்களிடையே நிலவுகின்றது. இதுவும் உண்மைச் செய்தியன்று. தமிழ்நாட்டில் இரண்டுவிதமான கடல் ஆமைகள் வந்து முட்டையிடுகின்றன. அவை அறிவியற்படி பின்வருமாறு :

Hawks bill turtle (Chelone imbricate)
and Loggerhead turtle (Thalassacheyeo caretta)

இவைகளை அழுங்காமை, பங்குனி ஆமை என்றழைப்பர். ஆக மூன்றுவகை ஆமைகளைச் சங்க நூல்கள் கூறியுள்ளன. இவைகளே இன்றும் தமிழ்நாட்டில் உள்ளன.

———

செய்திகள்

சிவஞான மாபாடிய வகுப்பு நிறைவு விழா

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் 24-4-83 இல் நெல்லைச் சிவஞான முனிவர் நூல் நிலையத்தில் முதுபெரும் புலவர் திருமிகு ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் தொடங்கப்பெற்று, சொல்லின் செல்வர் தி. சு. மணி அவர்களால் வியாழன் தோறும் ஓராண்டு காலம் நடைபெற்று வந்த சிவஞான மாபாடிய வகுப்பின் நிறைவு விழா 15-6-84 மாலை 6-30 மணியளவில் நடைபெற்றது.

இவ் விழாவிற்குத் திருமிகு இ. க. சேதுராமலிங்கம் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார்கள். நிறைவுரையாகச் "சிவஞானப் பயன்" என்னும் பொருள் பற்றி தி. சு. மணி அவர்கள் பேசினர். திருமிகு இராமையா அவர்கள் வகுப்பாசிரியர் அவர்களைப் பாராட்டிப் பேசிய போது, வகுப்பாசிரியருக்கு நூறாயிரம் ரூபா அன்பளிப்பாகத் தரலாம் என்றார்.

திருமிகு பழனிகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் அறக்கட்டளையைப் பாராட்டியதோடு மணி அவர்களையும், கழக ஆட்சியாளர் திருமிகு இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி. லிப். அவர்களையும் பாராட்டிப் பேசினர். கவி குறளேருழவர் திருமிகு கண்ணபிரான், திருமிகு சிவசம்பு ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினர். திருமிகு தி. சு. மணி அவர்கள் ஏற்புரை வழங்கிய பின், கழக ஆட்சியாளர் திருமிகு முத்துக்குமாரசாமி அவர்கள் தி. சு. மணி அவர்கட்குப் பொன்னுடை போர்த்தி நன்றி நவின்றனர். திரு. மணி அவர்கட்கு அருள்நிதி வழங்கப்பெற்றது. இறுதியில் வழிபாட்டுடன் விழா இனிது நிறைவுற்றது.

பண்ருட்டுத் தமிழுறவு மன்றச் சிறப்புக் கூட்டம்

16-6-84 சனி மாலை காட்டுப்பாடி பண்ருட்டுத் தமிழுறவு மன்றத்தின் சிறப்புக் கூட்டம் கவிஞர் வேலூர் ம. நாராயணன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புலவர் அமரன் தமிழும் ஆன்மீகமும் என்னுந் தலைப்பில் சிறப்புரை ஆற்றினர். கவிஞர்கள் அறுவர் கவிதை படித்தனர், மன்றச் செயலர் திரு. அறிவுச்சுடர் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. கோகுல்குமார் அறிக்கை படித்தார். தலைவர் முன்னுரையில் சி. பா. ஆதித்தனுரையும், காசி ஆனந்தன் அவர்களையும் பாராட்டி அரியதோர் உணர்வுரை ஆற்றினர். திரு. கே. என். இராமச்சந்திரன் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்— 16 ஆம் மாநாட்டுக் கருத்தரங்கம்.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பதினாறாவது மாநாட்டுக் கருத்தரங்கம் தில்லிப் பல்கலைக் கழகத்தில் சூன் 1, 2 ஆம் நாள்களில், மன்றத் தலைவர் அறிஞர் வ. சுப மாணிக்கம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்.

தில்லிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குருபக்சு சிங்கு அவர்கள் கருத்தரங்கு ஆய்வுக் கோவையினையும் மாநாட்டுச் சிறப்பு மலரினையும் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். ஏறக்குறைய மூந்நூறு பேராளர்கள் வழங்கிய ஆய்வுரைகள் படிக்கப்பெற்றன.

விருதுநகர்ப் பேராசிரியர் நவநீத கிருட்டிணன், காரைக்குடி பேராசிரியர் முருகசாமி, தில்லி செல்வி சுதா ஆகியோர் இன்னிசை விருந்து வழங்கினர். பேராசிரியர் சாலை இளந்திரையன் தலைமையில் தில்லித் தமிழ்ச்சங்கத் தலைவர் சீர்மிகு இராமையா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர்கள் வ. சுப. மாணிக்கம், தமிழண்ணல், ஆறு அழகப்பன், பா. வளன்அரசு, சாலினி இளந்திரையன், சோமலெ ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

வாழ்த்துகிறோம்



கழக நூலாசிரியருள் ஒருவரும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வருமான பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் "திருவாவடுதுறை ஆதீனத்தில் சமய இலக்கியப்பணிகள்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்தமைக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம், அன்னாருக்கு முனைவர் (Ph D.) பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ள செய்தியறிந்து மகிழ்கிறோம். முனைவர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பல தமிழ்ப் பணிகள் ஆற்ற அம்மை அம்பலவாணன் அருள் புரிவானாக என வாழ்த்துகிறோம்.

பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்கட்குப் பாராட்டு

தமிழவேள் பி. டி. இராசன் அவர்களின் வழித்தோன்றலும், தமிழ்த் தென்றலுமான உயர்திரு பி. டி. ஆர். பழனிவேல்ராசன் பி. எசி., பி. எல். அவர்கள் பாண்டிநாட்டின் பட்டதாரித் தொகுதி, தமிழக மேலவைத் தேர்தலில் வெற்றி பெற்றதை முன்னிட்டு, அன்னாருக்குப் பாராட்டு விழா 16-6-84 அன்று மாலை "மதுரை

திரு காலேஜ் ஹவுஸ்'' மண்டபத்தில், மதுரைத் தொழில் தந்தை உயர்திரு லெ. நாராயணன் செட்டியார் பி. எசி. அவர்கள் தலைமையிலும் மதுரை முதல் நகரத் தந்தை எஸ். முத்து, எம். எல். சி. அவர்கள் முன்னிலையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறநெறியண்ணல் திரு. இ. பழனியப்பனார், பழனிவேல்ராசன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். பெருமக்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫௮, ௪௨௫ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5 00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5 00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5 00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை தே. கண்ணன் அவர்கள்	5 00

மதிப்புரை

ஓர் அழுகை ஆதரவு தேடுகிறது!

[ஆசிரியர் : புலவர் மருதூர் அரங்கராசன், பாலமுருகன் பதிப்பகம், மருதூர் அஞ்சல், உடையார் பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம். விலை : உரு. 6-00.]

தரங்கெட்ட குமுகாயத்தினைச் சாடுதற்கும், மரம்போன்றோர்க்கு உணர்வினை ஊட்டுதற்கும் மரபுக் கவிதைகள் பயன்தரா எனக் கருதியோ என்னவோ, மரபுக் கவிதைகள் இயற்றும் ஆற்றல்பெற்ற இந் நூலாசிரியர் புதுக் கவிதைகள் என்னும் புதுக் கருவி மூலம் பல அரிய—புதிய—சீரிய கருத்துகளைக் கற்பனை வளத்துடன் இனிமையும் எளிமையும் கலந்து இந்நூலினை எழுதியுள்ளார். இதில் அரசியலில் நடைபெறும் அடாத செயல்கள் பக்குவமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. குமுகாயத்தின் கோணல்கள் நிமிர்த்தப்படுகின்றன. திருந்தாத உள்ளங்களையும் திருந்தச் செய்ய இந்த ''அழுகை ஆதரவு தேடுகிறது!'' என்னும் நூல் பயன்படும். தொழுகைக்கே ஆதரவு தந்து பழகியோர் இந்த அழுகைக்கும் ஆதரவு தந்து பார்த்தல் நலம்.

உலகை இயக்கும் ஒப்பற்ற தலைவர்

[ஆசிரியர் : பாவலர் தா. பால்வண்ணனார், சுத்த சன்மார்க்கம் அருள் நூல் வெளியீட்டகம், 22 இராசகோபால நாயக்கர் தெரு, சென்னை-2, பக்கங்கள் 8+116, விலை : உரு. 7-75.]

இந் நூல் வள்ளலாரைப்பற்றிய கருத்துகளைப் புதிய முறையில் வெளியிடுகின்றது. வள்ளலாரின் கடவுட் கொள்கை எப்படிப்பட்டது, மற்ற சமயத் தலைவர்கள் கடவுளைப்பற்றியும் வழிபாடுகளைப்பற்றியும் சொல்லியிருக்கும் கருத்துகளினின்று வள்ளலார் கருத்துகள் எங்ஙனம் வேறுபட்டுள்ளன என்பன பற்றியெல்லாம் கூறுகிறது இந்நூல். வள்ளலாரைப் பின்பற்றுவோர் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் பல இதில் காணப்படுகின்றன.

இசை முழக்கம்

[ஆசிரியர் : அருண்மொழி, ஆர்த்தி பதிப்பகம், 5 பரோடா தெரு விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை-33, பக்கங்கள் 176, விலை : உரு. 8 00.]

இந் நூலாசிரியர் சிறந்த மொழிப் பற்றும் சீர்திருத்தப் பற்றும், பொதுவுடைமைக் கொள்கையில் நாட்டமும் உடையவர் என்பது இவருடைய 'இசை முழக்கம்' என்னும் இப் பாடல் தொகுப்பால் அறியக் கிடக்கிறது. இன்னலுறும் இலங்கைத் தமிழர்கட்கு இந் நூலினைக் காணிக்கையாக்கியுள்ள இவர்தம் உள்ளப் பாங்கு பாராட்டத்தக்கது. தமிழ், காதல், தொழிலாளர், தத்துவம், பெண்கள், செந்தமிழ்ப் புலவர்கள், மாணவர்கள், இயற்கை என்னும் தலைப்புகளில் நல்ல சுவையான விறுவிறுப்பான பயனுள்ள கவிதைகளை இயற்றியுள்ளார்.

யுனஸ்கோ கூரியர் (தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பிதழ்)

உலகின் 27 முதன்மை மொழிகளில் வெளியிடப்பெறும் 'யுனஸ்கோ கூரியர்' 1984 மே இதழ் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. உலகப் புகழ்பெற்ற தொல்பொருள் ஆய்வாளர்கள், அறிஞர்கள் ஆகியோரின் கட்டுரைகள் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையையும் நாகரிகத்தின் சிறப்பையும், கலை இலக்கியங்களின் தனித் தன்மையினையும் விளக்குகின்றன. கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ண ஓவியங்களும், நிழற் படங்களும் இடம் பெற்றுள்ளன. நிழற் படப்பிடிப்பு பாராட்டத் தக்கது.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக'
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

அப்பர் அச்சகம், சென்னை-108.